சரசுவதி மகால் வெளியீடு எண். 317

வைத்தியநாதசுவாமி திருவிளையாடல்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

1991 விலை ரூ. 8-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 317

வைத்தியநாதசுவாமி
திருவிளையாடல்

பதிப்பாசிரியர் :

புலவர் திருமதி. **ச. திலகம்**, பி. லிட்.,

தமிழ்ப்புலவர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

*

*

இயக்குநர்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல்நிலையம்

தஞ்சாவூர்.

கி. பி. 1991] [விலை ரூ. 8—(

நூல் விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	வைத்தியநாதசுவாமி திருவிளையாடல்
பதிப்பாசிரியர்	:	திருமதி ச. திலகம், பி. லிட்.,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால்.
வெளியீடு எண்	:	317
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	1991, ஏப்ரல்
தாள்	:	14. 2 கிலோ சேஷசாயி
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	64
படிகள்	:	1000
எழுத்து	:	12 பாயிண்ட்
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம், தஞ்சாவூர்.
நூற்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	புராணம்
விலை	:	ரூ 8—00

வெளியீட்டாளர் முன்னுரை

'சமையந்தொறும் நின்ற தையல்' என்று போற்றப் படுகின்ற பொற்பு மிகுந்தவளாய் நம் தமிழன்னை திகழ் கின்றாள்.

பல்வேறு சமையங்களைச் சார்ந்த ஏராளமான இலக்கி யங்கள், நூல்கள் நம் பைந்தமிழ் மொழியில் தோன்றிச் சுடர்வீசுகின்றன.

சிவனியமும், மாலியமும் இம்மண்ணில் பெற்றிருந்த ஏற்றத்தின் விளைவாக மூவர் முதலிகளின் தேவாரத்தை யும், மணிவாசகரின் திருவாசகத்தையும், ஆழ்வாராதிகளின் பாசுரங்களையும், பெரியபுராணம், திருவிளையாடற்புரா ணம் முதலிய இலக்கியங்களையும் பெற்றுச் சிறக்கின்றது நம் தமிழ்மொழி.

சிவனிய இலக்கியங்களில் ஒன்றான திருவிளையாடற் புராணம் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களை, இலக்கியச் சுவையுடன் விழுமிய நடையில் கூறுகின்ற இலக்கிய வகையாகவே தழைத்திருக்கின்றது எனலாம்.

சிவபெருமானின் திருவிளையாடல்களை அழகுற விவரிக்கும் அரிய இலக்கியங்களாகத் தமிழில் வேம்பத்தூ ரார் திருவிளையாடல், கடம்பவனப்புராணம், சுந்தர பாண்டியம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் முதலியன விளங்குகின்றன. இவையனைத்தும் செய்யுள் நடையால் இயன்றவை. இவ்விலக்கியங்கள் இலக்கிய அன்பர்களின், சமய அடியார்களின் உள்ளங் கவர்வனவாக ஒளிர்கின்றன.

சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களில் சில வற்றை உரைநடையில் கூறுகின்ற நூலாக இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ள வைத்தியநாதசுவாமி திருவிளை யாடல் அமைந்துள்ளது.

இந்நூல் கூறுகின்ற திருவிளையாடல்கள் முன்னரே இலக்கியங்களில் இடம்பெற்று அறியப்பட்டுள்ள திருவிளை யாடல்களிலிருந்து வேறுபட்டனவாகக் காணப்படுகின்றன. இந்நூல் எளிமையாகவும், சுவைபடவும் இலங்குகின்றது.

எளிய, இனிய, பக்திமணங் கமழும் இந்நூலைச் செப்பமாக நம் நூலகத்தின் தமிழ்ப் புலவர் திருமதி ச. திலகம் பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகள்.

மணிப்பிரவாளத்திலிருந்த பகுதிகளுக்கு விளக்கம் தந்தும் மெய்ப்புத் திருத்தியும் உதவிய முதுநிலை வட மொழிப் பண்டிதர் திரு. தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

இந்நூலை வெளியிடுவதற்கான பொருளுதவியைக் கொடுத்துதவிய மைய அரசுக்கும் என் நன்றி.

இந்நூலைத் திருத்தமுற அச்சிட்டுள்ள நமது நூலக அச்சகத்தினருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்கூறு நல்லுலகம் இந்நூலை ஏற்றுப்போற்றும் என்னும் நம்பிக்கையையும் விழைவையும் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

தஞ்சாவூர்,
13—4—91.

மு. சதாசிவம்,
இயக்குநர்.

பதிப்பாசிரியர் முகவுரை

"வாயானை மனத்தானை மனத்து ணின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்ற
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே".

சீர்மிகுந்த வானவர் தலைவரும் முனிவரும் தம் தலை மீது கைகளைக் குவித்து மெய்சிலிர்க்க வாழ்த்தி வர மருள்க என வேண்ட, அவர்கட்கருளி, அறிவைக் கடந்து, மொழியைக் கடந்து, உணர்வையும் கடந்து, மறைமுடிவை யுங் கடந்த பரம்பொருளாகிய சிவபெருமானாரை வழி படுவது தமிழ்நாட்டின் தனிச்சிறப்பு. சிவபெருமானார் எங்கும் நிறைந்தவராயினும் "தென்னாடுடைய சிவன்" என்றே மாணிக்கவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் திருவாய் மலர்தலைக் காணலாம்.

அத்தகைய பரம்பொருள் "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார் ஆயினும், வழிபடும் அடியவர் விரும்பியவாறு உருவும் பெயருந் தொழிலும் புரிந்து, அடியவரிடுக்கண் களைவாரென்பது பெரியோர்களின் கருத்தாகும். அவ் வாறே, மதுரையில் 64 திருவிளையாடல்களை இயற்றி யருளி, அடியவரிடுக்கண் களைந்தருளினார் சொக்கப்பெரு மானார். அவற்றைத் தமிழிற் பல புலவர்பெருமக்கள்,

மொழிபெயர்த்துப் பாடியுள்ளனர். அவற்றுள் மிகச்சிறந்ததும், இனிய விழுமிய நடையினையுடையதும், அன்புச் சுவை கனிந்துள்ளதும் பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடலேயாகும்.

சிவனுடைய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் வேறு நூல்களும் உள்ளன. அவை :—

1. செல்லி நகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியவர்களால் இயற்றப் பெற்ற "திருவாலவாயுடையார் திருவிளையாடல்". இது "வேம்பத்தூரரார் திருவிளையாடல்" எனவும் வழங்கும்.

2. தொண்டை நாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாத பண்டிதரால் இயற்றப் பெற்ற "கடம்பவனப் புராணம்"

3. தொண்டை நாட்டிலுள்ள வாயற்பதியிலிருந்த அனதாரியப்பன் என்னும் புலவரால் இயற்றப்பெற்ற "சுந்தரபாண்டியம்"

வடமொழியில் 18 மகாபுராணங்களும், 18 உபபுராணங்களும் தெய்வத்திருமேனிகளின் தோற்றம் அவர்கள் ஆற்றிய துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் பற்றி விரிவாகக் கூறும். அவற்றுள் சிவபுராணம், ஸ்காந்தம் முதலானவை சிவபெருமானுடைய பெருமைகளையே முக்கியமாகக் கூறுமாயினும் பிற புராணங்களிலும் ஆங்காங்கு சிவபெருமானின் வியக்கத்தக்க திருவிளையாடல்கள் கூறப்பட்டுள்ளன.

வடமொழிப் புராண நூல்கள் யாவுமே வேதத்தின் உட்கருத்தாகிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் இவற்றைக் கதைகள் மூலமாக எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் கூறுவதாகும். ஊழிக்காலம் நேரிட்டபொழுது

அதனைக்கண்டு பயந்த சௌனகாதி முனிவர்கள் பிரும்ம தேவனை நாடிப் பேரழிவிலிருந்து தப்புவதற்கு உபாயம் கூறுங்கள் எனக்கேட்க பிரம்மதேவன் தர்ப்பைப் புற்களால் பிரிமணை போன்ற (வட்டச்சக்கரம்) ஒன்றை அமைத்து அதை உருட்டிவிட்டு "இப்புற்சக்கரம் எங்கு போய் விழு கிறதோ அவ்விடத்தில் நீங்கள் தங்கி 12 ஆண்டுகள் தொடர்ந்து யாகத்தைச் செய்து வாருங்கள். நீங்கள் தங்கி யிருக்கும் இடத்தில் தீமை எதுவும் அணுகாது" என்று கூறி அனுப்பினார்.

சௌனகாதி முனிவர்களும், அப் புற்சக்கரத்தைப் பலகாலம் தொடர்ந்து சென்று காட்டில் ஓர் இடத்தில் அச்சக்கரம் விழுந்ததும், அவ்விடத்தையே தம் இருப்பிட மாகக் கொண்டு, 12 ஆண்டுகள் தொடர்ந்து செய்யக்கூடிய வேள்வியைத் தொடங்கினர்.

வேள்வி என்பது காலை தொடங்கி நண்பகல் வரையி லும் அப்பால் மாலையிலுந்தான் நடத்தப்படவேண்டும். இடைவேளைகளில் படுத்துறங்குவது தடுக்கப்பட்ட ஒன்று என்பதால் அவ்வேளைகளில் தார்மிகச்(அறவழி) சொற் பொழிவுகள் நடத்தப்பெறும்.

18 புராணங்களையும் இயற்றிய வியாச முனிவர் தமது சிஷ்யரான சூதமுனிவருக்கு மெய்ஞ்ஞானத்தையும், நினை வாற்றலையும், சொல்லாற்றலையும் அருளியிருந்தார். அம்முனிவர் தாம் கற்றறிந்த 18 புராணங்களின் தத்துவங் களையும், மாபெரும் வேள்வியை நடத்தும் சௌனகாதி முனிவர்களிடையே கூறுவதற்காக வியாசமுனிவரால் அனுப்பப்பட்டு அதன்படி வேள்விச் சாலையை அடை கிறார். அம்முனிவரின் ஆற்றலை அறிந்திருந்த சௌனகாதி முனிவர்கள் அவரை வரவேற்று, உபசரித்து, தெய்வத்திரு மேனிகளின் சரித்திரங்களையும், அறவழிக் கருத்துக்களை யும் கூறுமாறு கேட்க, சூதமுனிவர் மகிழ்ச்சியோடு கூறு

கிறார். இந்த வகையில்தான் 18 புராணங்களும் அமைந்துள்ளன.

இப்பொழுது தமிழில் வெளியிடப்பெறும் "வைத்திய நாதசுவாமி திருவிளையாடல்" எனும் இச்சிறு புராணநூல் மேலே கூறப்பட்ட அமைப்பில் சூதமுனிவரால் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறப்படுவதாய் அமைந்துள்ளது. இந் நூலின் கதைகள் யாவுமே வன்னிவனநாதரைச் சுற்றியே அமைந்துள்ளன. இத்தலம் காமராஜர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகில் அமைந்துள்ளதென அறிய முடிகிறது. இச்சிறுநூல் வடமொழிச் சொற்கள் கலந்த (மணிப்பிரவாள நடையில்) கொச்சையான பேசுந் தமிழில் யாவரும் எளிதில் அறியத்தக்கவண்ணம் அமையப்பெற்றுள்ளது. சில கடின வடமொழிச் சொற்களுக்குப் பொருள் ஆங்காங்கு தரப்பெற்றுள்ளன. இவ்வகையில் இது ஒரு புதுமை எனலாம்.

சரசுவதி மகால் நூலகத்தில் நெடுங்காலமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் (பனை ஓலை) தமிழ்ச்சுவடிகளில் 374-வது எண்ணைக் கொண்ட இந்நூலை ஆக்கியோன் காலமும், பெயரும் அறியக்கிடைக்கவில்லை.

சைவப் பெருமக்களால் திருத்தொண்டர் வரலாற்றைக் கூறும் பெரியபுராணமும், முருகப்பெருமானார் திருவிளையாடலைக் கூறும் கந்தபுராணமும் பாராட்டி வழிபடும் முறையிற்பயில்வது போலவே இத்திருவிளையாடற்புராணமும் வழிபட்டு வரத்தக்கதாகும்.

இச்சுவடி, பல நூற்றாண்டுகளைக் கடந்து வந்துள்ளதால் ஆதியும் அந்தமும் அற்ற தெய்வத்திருமேனியாகவே கிடைக்கப்பெற்றது. சிறியதாயினும் இதனை ஒரு முழு நூலாக்குவதற்குப் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இதனைச் சுவடியில் உள்ளவாறே பதிப்பிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்கியும், தமது பல அலுவல்களுக் கிடையேயும் அன்புடன் அவ்வப்போது அச்சுப்பிரதிகளை வாங்கித் திருத்தமும் செய்து கொடுத்துதவிய நூலக இயக்குநர் **பேராசிரியர் திரு. மு. சதாசிவம்**, எம். ஏ., எம். லிட்., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

இந்நூலின் நடை வடமொழி "மணிப்பிரவாளமாக" வடமொழிச்சொற்கள் கலந்த பேச்சுத் தமிழில் அமைந்துள் ளதால், சுவடியில் கூறப்பெற்ற நடை மாறாமல் அதே சமயம் வடமொழிச் சொற்களுக்குரிய தமிழாக்கம் செய்து கொடுத்ததுடன், மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கலுக்கு உதவியும், அச்சுப் பிரதிகளைப் பிழை நீக்கித் திருத்தம் செய்து முழு ஒத்துழைப்பு நல்கிய நூலக மேனிலை வட மொழிப் பண்டிதர் திருவாளர் **தேதியூர் எஸ். கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புதுமையான நடையில் உள்ள இந்நூலைப் பிழை யின்றி அச்சிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிய நமது நூலக அச்சகத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

ச. திலகம், பி. லிட்.,
தமிழ்ப்புலவர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
11—4—91.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயருர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
11—4—91.

மூ. சதாசிவம், எம்.ஏ.,எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

பொருளடக்கம்

வன்னிவன க்ஷேத்திர மகிமை ... 1

பெண்ணுக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்த லீலை 10

வன்னிவனத்திற்கு "மிருத சஞ்ஜீவி வனம்" எனப்பெயர் வரக்காரணம் ... 17

கொடிய பாபியும் முக்தி பெற்ற வரலாறு ... 18

தேவமித்திரனுக்கு வெள்ளைக் குஷ்டம் தீர்த்தது 23

வன்னிவனநாதருக்கு "அகஸ்தீச்வரர்" எனப்பெயர் வரக்காரணம் 26

சிவத்வஜனுக்குப் படிக்காசு கொடுத்தருளியது 29

ஆமுகம் தீர்த்தது 38

மிளகைப் பயறாக்கி அதை மிளகாக்கியது... 40

மண்குடத்தைப் பொன் குடமாக்கியது ... 42

வாணன் தலை வெடித்தது 15

தாதனைக் கரடி ரூபமாக வந்து தடுத்
தாட்கொண்டது 47

மடிசிலை திரவியம் வாங்கினது 48

ம தங்கஸ்திரீகளுக்குத் தியாகம் கொடுத்தது 49

வலையனுக்குக் கண்கொடுத்தது 51

வைத்தியநாதசுவாமி திருவிளையாடல்

வில்வவன க்ஷேத்திர மகிமை

நைமிசாரண்யம் எனும் வனத்தில் முனிவர்கள் பலரும் ஒன்றுகூடி. 12 ஆண்டுகள் வரை தொடர்ந்து செய்ய வேண்டிய யாகத்தினை உலக நலன் கருதிச் செய்தனர். அது சமயம் இடைவேளையில் அறவுரைகள் கூறுவதும், கேட்பதும் அவர்களுக்குப் பழக்கமாக இருந்தது. அச் சமயம் வியாசமுனிவரின் சீடருள் ஒருவரான சூதமுனிவர் பதினெட்டுப் புராணங்களும் அறிந்திருந்த காரணத்தினால் அவர் நைமிசாரணியம் வந்தபோது அவரை வரவேற்று உபசரித்து. அவருக்கு அர்க்கிய, பாத்ய முதலான பூசை பண்ணிச் சிரமபரிகாரமும் செய்துகொள்ள உதவி அப்பால் சூதரைப் பார்த்து நைமிசாரண்ய ரிஷிகள் கூறினர்.

முனிவரே, தங்கள் தரிசி(ச)னத்தால் கிருதக்ருத்யாளானோம். எங்களுக்கு இன்றைக்கு அன்றோ, இதுகாறும் செய்து வந்த தவங்களும் யாகங்களும் சபலமாச்சு. 'இது காறும் தார்மீகக் கதைகளை எங்களுக்கு விளக்கமாகக் கூறி அனுக்கிரகம் பண்ணினீர். அப்படியே மேலும் பல நல்ல வரலாறுகள் கூறி அனுக்கிரகம் செய்யவேண்டுமென (ப்)பிரார்த்திக்க சூத பௌராணிகர் கூறலானார்!

முனிவர்களே! இப்பொழுது மாத்யஞ்ஜன தியான காஷ்ட முனிவருக்கு ஆனந்த நடனமாடும் பரமேச்சுரனின்

தரிசனம் பண்ணி வைத்தது, சமீவனத்திலே தேவமித்திரனுக்கு வெள்ளைக் குட்டம் தீர்த்து, பரமேசுரன் கிருபா கடாக்ஷித்தது, விந்தியமலையில் அகத்திய பகவான் வந்து, தபசு பண்ணினது, அந்த அகத்தியர் சிவபெருமான் திருவடிகளில் அன்றலர்ந்த நீலோற்பல புஷ்பங்களைச் சாற்றி அவற்றைத் தன் சிரசிலே தரித்துக் கொண்டது, விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள சிவாலய சிகரத்தைக் காணலாகா தென்ற, சிவநிந்தை செய்த தாதனைக் கரடி உருவாய் வந்து அடக்கின விபரமும், சுவாமி பேரில் பிரபந்தங்கள் பாடிய மதங்கி ஸ்திரீகளுக்குத் திரவியங்களை அருளிச்செய்தது. பகவான் வலையனுக்கு திருஷ்டி (பார்வை) கொடுத்து கைலாசத்திற்கு அழைத்துப் போனது முதலானவை விபரமாகக் கேளுங்கோள் என்று நைமிசாரண்ய ரிஷிகளுக்கு சூத முனிவர் அனுக்கிரகம் பண்ணினார்.

கைலாசத்தில் பரமேசுவரன் பார்வதி சமேதராய், நவரத்தினக் கசிதமான (இரத்தினங்கள் இழைக்கப்பட்ட) மண்டபத்தில் நந்தி முதலான பூத கணங்களால் பூஜிக்கப் பட்டவராய் மங்களகரமாகக் கொலுவிருக்கச்சே (இருக்கும் பொழுது) பார்வதிதேவி பரமேசுவரனைப் பார்த்து, சுவாமி! ஜம்புத்தீவில் பாரதகண்டத்தில் தமிழ்நாட்டில் தேவேந்திரன் வந்து சேவித்த ஹாலாஸ்ய க்ஷேத்திரத்திற்கு அருகில் இருக்கிற தலங்களின் சரித்திரத்தை என் மனம் சந்தோஷமாயிருக்கும்படி (மகிழும் வண்ணம்) தேவரீரே முன்பு சொல்லியிருக்கிறீர்.

இப்பொழுது எந்த தலத்தைப் பார்த்த மாத்திரத்தில் முக்தி கிடைக்குமோ அத்தலம் பற்றிச் சொல்ல வேண்டும் என்று தேவி கேட்கச்சே (கேட்கும்பொழுது) பரமேசுரன் அனுக்கிரகம் பண்ணினார்.

(இப்படி இருக்கிற பொழுது) அச்சமயம் நாரதர் அங்கு வந்து பரமேசுரனையும், பார்வதியையும் சேவித்துத் தோத்திரம் பண்ணியதும் பார்வதி தேவிக்கு, சுவாமியாலே

அனுக்கிரகிக்கப்பட்ட வரலாற்றைக் கூறிப் பின்னர் விடை கொடுத்து அனுப்பப்பட்டவராய் நாரதர் பூலோகத்திற்கு வந்தார்.

பூவுலகில் சதுரங்க[1] பலங்களோடு வந்து. உண்டான மகாபலசேனன் என்ற ராஜாவிடம் வந்தார். வரச்சே (வரும்பொழுது) அந்த ராஜாவும் (நாரதரை) எதிர் கொண்டு அழைத்து, அவரைப் பூசை பண்ணித் தன்னுடைய சிம்மாசனத்தின் மேலே உட்கார வைத்து அவருக்கு ஷட்ரஸோபேதமான[2] உணவளித்தார். நாரதர் சந்தோஷ மாய் இருக்கிற சமயத்திலே அந்த அரசன், மூன்று உலகிலும் பார்த்த நிமிடத்திலே மோட்சத்திற்கு ஹேது வாயிருக்கிற படிக்கு ஒரு ஸ்தலம் எதுவென்று கேட்க நாரதர் அந்த ராஜாவுக்குப் பார்வதி தேவிக்குப் பரமே சுரன் அனுக்கிரகித்த வரலாற்றைச் சொல்லுகிறார்.

அரசே! முன்பொரு சமயம் கைலாசத்திலே பார்வதி பரமேசுவரர் (தனியாக) இருக்கிறப்போ பார்வதி தேவிக்குப் பரமேசுரன் சொன்ன கதை ஒன்றினை நாம் கேட்டோம், அந்தக் கதையை உனக்குச் சொல்லுகிறோம். கேளும்,

விந்திய பருவதத்திற்கு தட்சிணபார்சுவமாக[3] பாரத கண்டத்தில், ஜம்புத்தீவில் கங்கை யமுனை. சரசுவதி, காவேரி முதலான தீர்த்தம் உண்டு. அந்த (அவற்றுள்) பிரும்ம தீர்த்தத்தண்டே ஒரு புண்ணிய க்ஷேத்திரம். அது எதுவென்றால், காசி, கேதாரம், காஞ்சி, முதுகுன்றம், திரு வானைக்கா, அதையொட்டி திருவையாறு, திருவிடை மருதூர்,[4] திருவண்ணாமலை, திருவெண்ணெய்நல்லூர், இராமேசுரம். இப்படிப்பட்ட தலங்களுக்குள் ....[5]

---

1 நால்வகைப் படைகளுடன் கூடிய

2 அறுவகைச் சுவையுடைய உணவு.

3 தெற்குப்பக்கமாக.

4 திருவடைமருதூர் என்று சுவடியில் உள்ளது.

5 இப்பகுதி சிதைந்துள்ளது.

வலத்துக்கு ஏழு யோசனை தூரத்துக்குள் தென்மேற்காக வடபத்ர சாயியாயிருக்கிற (ஆலிலைமேல் பள்ளிகொண்டவராக உள்ள திருமாலின்) விஷ்ணுத்தலத்துக்குச் சமீபமாக ....[1] திசையில் ஒரு சமீவனக்ஷேத்திரம் உண்டு. அந்த க்ஷேத்திரத்தின் மகிமை அறிந்து, துருவாசரிஷி அங்கே பர்ணசாலையில் ஓரிடத்தில் தியானத்தில் அமர்ந்து தபசு பண்ணிக்கொண்டு (வந்தபொழுது) வெகுநாளாக இருந்தார்.

இப்படி மௌனத்துடன் இருந்து தபசிலும், ஒரு கண்ணை முழித்துப்பார்த்தபொழுது[2] அங்கேயிருந்த தடாகத்திலே சஹஸ்ரதளோ[3] பேதமான ஒரு தாமரைக் கமலம் உண்டாச்சு (உண்டாயிற்று).

அந்தத் தாமரைக் கமலத்திலே, சஹஸ்ர கோடி (ஆயிரம் கோடி) சூர்யபிரகாசமான ஒரு லிங்கத்தைக் கண்டு எழுந்து மிகவும் அதிசயப்பட்டு அந்த லிங்கத்தைப் பிரதி சிணம் பண்ணி (வலம்வந்து) ஷோடசோபசார பூஜை பண்ணி சேவித்து தேவரீர் இந்தப் புண்ணிய க்ஷேத்திர (தலத்தில்) வனத்தில் பரிபூரண வஸ்துவாக எழுந்தருளி இருக்க வேண்டுமென்று பிரார்த்திச்சார் (வேண்டினார்).

அப்பொழுது சமஸ்த தேவதைகளும் சேவிக்கத்தக்கதாக சர்வாபரணபூஷிதராய் (எல்லாவகை அணிகளாலும் அலங்கரிக்கப்பட்டவராய்) மான், மழு, சதுர் புஜமாய் திரிநேத்ர கால கண்டனாய் (சிவபெருமான்) எழுந்தருளி இருக்கக் கண்டு, துருவாசரிஷி மிகவும் சந்தோஷித்து சந்தனம் (அகில்) அகரு, கஸ்தூரி பரிமளங்களினால் தூப தீபங்களினாலே சோடச உபசார பூஜை பண்ணி,

---

1 இப்பகுதி சிதைந்துள்ளது.

2 விழித்து.

3 ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை.

(16 வகை உபசாரங்கள் கொண்ட பூஜை செய்து) அஷ்டோத்தர (சத) ஆவர்த்திகளால் அர்ச்சனை செய்து (108 முறை மந்திரங்களால் மலர்களை அர்ப்பணம் செய்வது) பிரீதியுக்தனாய்த்,[1] தவம் பண்ண அந்தச் க்ஷேத்திரத்திலே தானே துருவாச ரிஷி வாசம் பண்ணிக் கொண்டிருந்த பொழுது பரமேசுரன் விஷ்ணு பிரம்மாதிகளினாலேயும் அறியப்படாத ரகசியத்தை உமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறோம் என்று சொன்னார்.

அது எது என்றால், சிதம்பர க்ஷேத்திரத்தில் பதஞ்ஜலி வியாக்ரபாதருக்கு நடனம் நிருத்தம் பண்ணினதை எங்களுக்கும் காண்பிக்க வேண்டும் என்று நம்மை மாத்யஞ்சன தியானகாஷ்டர் பிரார்த்தித்த பொழுது சமீவன க்ஷேத்திரத்தில் வந்து நிருத்தம் பண்ணி நடனம் காண்பிக்கிறோம், நீங்கள் அங்கே போய்த் தபசு பண்ணிக் கொண்டிருங்கள் என்று அனுக்கிரகம் பண்ணினோம். அந்தப்படி அவர்கள் சமீவன க்ஷேத்திரத்தில் தபசு செய்கிறார்கள். அவர்களுடனே (நீங்களும்) இருந்துவாரும், (உடனே) உமக்கும் நடனம் காண்பிக்கிறோம் என்று இந்தப்படி அனுக்கிரகம் பண்ணினார்.

இதற்குள் துருவாச முனிவரும் அங்கேதானே வாசம் பண்ணிக் கொண்டிருந்தார்.

இப்படி நாரதர் மகாபலசேனனுக்கு அனுக்கிரகம் பண்ணின பொழுது அந்த மகாபலசேனன் வினயசாலியாய்[2] நாரதரைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

பிரபஞ்ச சாகரமாகிற சமுத்திரத்திலே அமிழ்ந்து இருக்கிற எனக்கு தேவரீர் ஒரு தெய்வம் போலே (ஸம்ஸார ஸாகரத்தினைக் கடப்பதற்கு) ஓடம் போலே,

---

1 மகிழ்ச்சியுற்றவராக.

2 பணிவு மிக்கவனாய்.

மோட்சமாயிருக்கிற கரையிலே இறக்கி வைக்கிறோம் என்கிறதாக கடாச்சிச்சீரே. (அருள்புரிந்தீர்களே) இப்பொழுது அந்தச் சமீவனக்ஷேத்திரத்திலே வசிச்சாலும், மரிச்சாலும் (வாழ்ந்தாலும் இறந்தாலும்) மோட்சம் உண்டோ என்று மகாபலசேனன் நாரதரைக் கேட்க அவர் அனுக்கிரகம் பண்ணினார். எது என்றால்,

மனுஷ்யனாய், தாவர, ஜங்கமங்கள் (அசையா அசையும் இனங்களான தாவரங்களும் மிருகங்கள் முதலானவையும்) அந்தத் தலத்திலேயே போய் வசிச்சாலும், மரிச்சாலும் பாதகங்கள் எல்லாம் தீர்ந்து முக்தி பெறுவார்கள் என்று அனுக்கிரகம் பண்ணினார். மகாபலசேனன் சமீ வனத்திலே எழுந்தருளியிருக்கிற சிவனைத் தியானம் பண்ணி விரதத்தை அனுட்டித்துத்தன் புருஷாயுசு[1] மட்டும், ராஜ்யபாரம் நீதியாகவே பண்ணி சரீர[2] அந்தத்திலே தன் வம்சத்துடனே கூட மோட்சத்தை அடைந்தான்.

அதற்குப் பிறகு சிவானுக்கிரகத்தின் பேரிலே மாத்யஞ்சனத் தியான காஷ்டரும் சமீவனத்திலே வந்து துருவாசரைக் கண்டு, பிரதட்சிணம் பண்ணிக்கொண்ட பொழுது துருவாசரும், மாத்யஞ்சன முனிவரும் (நாங்கள் சிவபெருமானின்) ஆனந்த நிருத்தம் பார்க்க வேண்டும் என்று இந்த வனத்திலே வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார் (கள்). அப்பொழுது மாத்யஞ்சன தியான காஷ்டரும் துருவாசரைச் சேவித்து தாங்களும் (தாமும்) வாயு திக்கிலே வருஷா காலம்[3] முதல் வசந்த காலம் வரை தபசு பண்ணிக் கொண்டிருந்தார்.

---

1 100 ஆண்டுகள் என்பது பொருள்.

2 இறக்கும் தறுவாயில்.

3 மழைக்காலம் முதல் இளவேனிற்காலம் வரையில்.

அப்பொழுது ஹேம தீர்த்தத்தால் (சிவபெருமானுக்கு) அபிடேகம் பண்ணி வைத்து ஆயிரம் இதழ்களோடொத்த தாமரைக் கமலத்தை எடுத்து அர்ச்சனை பண்ணினார்கள்.

இவ்வாறு (அவர்களிருவரும் சிவபெருமானுக்கு) அர்ச்சனை பண்ணி பூசை பண்ணிக் கொண்டு அந்தத் தலத்திலே தவஞ்செய்துவந்தார்கள். என்று சூதர் நைமிசாரண்ய ரிஷிகளைப் பார்த்து, அனுக்கிரகம் பண்ணினார்.

அப்போ நைமிசாரண்ய வாசிகள் சமீவன க்ஷேத்திரத்திலே பரமேசுரன் நிருத்தம் பண்ணின சரித்திரத்தை எங்களுக்கு அறிந்து பொறுப்பாகச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். சூத முனிவரும் நல்லதென்று அனுக்கிரகம் பண்ணினார்.

கைலாசத்திலிருக்கும் சிவபெருமான் முன்பு தியான காஷ்டருக்கு நடனம் காண்பிக்கிறோம் என்றும், அவாளும் அங்கே வந்து தபசு பண்ணிக்கொண்டு இருக்கிறார் என்றும், அங்கே போய் அவாளுக்கு நடனம் காண்பிக்க வேண்டுமென்று பார்வதி(யுடன்) கூறியவாறு ரிஷபாரூடராக[1] கணநாதாளுடன்[2] சமீவனத்திலே எழுந்தருளினதைக் காண மாத்யஞ்சன தியான காஷ்டர்(ரும்) துருவாச முனிவரும் சுவாமியைக் கண்ட மாத்திரத்திலே பரமேசுரனும் தயாசாலியாய், இவாளுக்கு இந்த ஜோதிமயமாய் இருக்கிற புதுவை அம்பலத்திலே நடனம் பண்ணுகிறோம் என்று நடனம் பண்ண நினைச்சார். நினைச்சப்போ வலது பாதத்தைப் பூமியிலே ஊன்றி இடது காலைத் தூக்கிக் கொண்டு கரங்களிலே அபயமும், மானும், மழுவும், டமருகமும்[3] பிரகாசிக்க முகத்திலே திரிபுண்ட்ர[4] விபூதி பிரகாசிக்க

1 இடப வாகனத்தில் எழுந்தருளியவராக.
2 பூத கணத்தவர்களுடன்.
3 உடுக்கை,
4 மூன்று வரிக்கோடுகளாய் விளங்கும்,

ஜடையிலே கொன்றைமாலையும், கங்கையும் பிரகாசிக்க, நந்திகேசுரர் தேவதுந்துபி வாத்ய கோஷங்கள் முழக்க ஆயிரம் சீரான குடமுழவு முழக்க, ஆயிரங்கரவாணன் குட முழவு, யானைக் கொம்பு, வெற்றிச்சங்கு முழக்க நாரதர் வீணை வாத்யம் முழக்க சரசுவதி தோத்திரம் பண்ணப் பார்வதிதேவி தாளம்போட, இந்தப்படியால்(க) பரமேசு வரன் புதுவை அம்பலத்திலே நடனம் பண்ணினார்.

இப்படி நடனம் பண்ணச்சே பாதங்களிலே தரிக்கப் பட்ட சிலம்பின் ஓசையும், காதுகளிலே தரிக்கப்பட்ட மகர குண்டலங்களின் ஓசையும் ஜடையிலே தரிக்கப்பட்ட கங்கை பவானியினுடைய ஓசையும் அட்ட புஜங்களிலே தரிக்கப் பட்ட வாகுவளையலுட தொனியும்[1]. (ஓசையும்) அல்லாமல் அவருடைய முக மண்டலத்தையும், மந்தகாசத்தையும்[2] பாதாரவிந்தத்தையும் காணாமல் ஜோதி ரூபமாகக் கண்டார்கள். அப்போது அந்த ரிஷியான முனிவரும் " அரகரா " வென்று அஞ்சலிபந்தம்[3] பண்ணிக்கொண்டு தாங்களும் நிருத்தம் பண்ணிக்கொண்டும் தோத்திரம் பண்ணிக்கொண்டும் (இந்த) பூமியிலே விழுந்து ஆனந்த பாஷ்பம்[4] பொங்க சேவிச்சு சுவாமியை அனேக ஸ்துதி பண்ணி பிரார்த்தித்துக் கொண்டு இருக்கிற வேளையிலே சுவாமியும் மான், மழு, திரிநேத்ர நீலகண்டராய் பார்வதி சமேதராய் இவாளுக்கு பிரத்யட்சமாயி(கி) ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

அது எதுவென்றால். சூரிய பகவானுடைய ஜோதிர்மய மான வன்னி வனத்திலே நடனம் பண்ணினது தில்லையம் பலத்திலும்[5] விசேஷமார்சுது. உங்களுக்கு மோட்சம் தந்

---

1 தோள் வளையங்களின் ஒலியும்.

2 புன்சிரிப்பு.

3 கை கூப்பிக்கொண்டு.

4 ஆனந்தக்கண்ணீர்.

5 தில்லையம்பலத்தைக் காட்டிலும்.

தோர் என்று இந்தப்படி பரமேசுரன் அனுக்கிரகம் பண்ணினார்.

பிற்பாடு இப்படி இருக்கிற வனத்திலே வாசம் பண்ணி னவன், இதை ஸ்மரிச்சவன்[1], மோட்சத்தை அடைவது நிச்சயம் என்று அவாளுடனே சொல்லி சுவாமியும் அந்தர்த்தான மானார்[2].

இப்படிப் பரமேசுவரனாலே அனுக்கிரகம் பண்ணப் பட்ட மாத்யஞ்சனதியானகாஷ்டர் கைலாசத்திற்குப் போய் சாயுஜ்ய[3] பதவி அடைந்தார்.

இப்படியாய் அதிசயமான சமீவனத்தினுடைய மகிமையைக் கேட்டு, தேவலோகத்திலேயிருக்கும் விச்வகர்மா சிவனுக்கு ஆலயம் கட்டுவிக்க வேணுமென்று சிந்திச்சு சமீவனத்துக்கு வந்தான். வந்து, பரமேசுவரனுக்கும், பார்வதிக்கும் அர்தமண்டபம், சர்ப்பக்கிருகம், சிகரக் கோபுரங்கள், மண்டபங்கள் சகலமும் கட்டி முடித்து, பட்டணமும், மாடமாளிகை, உப்பரிகையுடனே சிருட்டித்து, மகாமேருவுக்கு சமானமாய் சுவாமிக்கு இரதமும் நிருமாணிச்சு யதாசாஸ்த்திரம்(ப்) பிரகாரமாக வைசாக மாதத்தில் பௌர்ணமியில் புஷ்ய நட்சத்திரத்தில் தீர்த்த வாரியும்[4], உண்டாக்கத் தக்கனவாய்ப் பண்ணி, இப்படி நடப்பிச்சார். இப்படி நடப்பிச்சபடி ரதோற்சவம் நடக்கச்சே தேவதைகள் அத்தனைபேரும் (வந்து) புஷ்ப வருஷம்[5] வருஷிச்சு பக்தாளாயிருக்கிறபேர் சகல தர்மமும் பண்ணி நடப்பிச்சுக் கொண்டு, பரமேசுவரன் தயாசாலியாய் விச்வகர்மாவுக்குக் காட்சி கொடுத்தார்.

---

1 நினைத்தவன்.

2 மறைந்தார்.

3 இறைவனுடன் ஒன்றாகக் கலந்துவிடும் நிலை.

4 திருவிழா முடிவில் ஸ்வாமி தீர்த்தம் கொடுப்பதாக ஒரு நிகழ்ச்சி உண்டு. அதனைத் தீர்த்தவாரி என்று கூறுவர்.

5 மலர்மாரி.

இப்படிப்பட்ட விசேஷ தினங்களிலே யாதொருத்தன் நம்மை வந்து சேவிக்கிறானோ அவனுக்கு சாயுஜ்ய பதவி கொடுப்போம் என்று விச்வகர்மாவுடனே சொல்லித் தேவ லோகத்திற்கு அனுப்பிவி(வை)த்தார். பரமேசுவரனும் பிற்பாடு விச்வகர்மா நிர்மாணம் பண்ணின கோவிலிலே தம்முடைய லிங்கத்திலே சாந்நித்யமாயிருந்தார் என்று இந்த சூதர் நைமிசாரண்யவாசிகளுக்குச் சொல்லச்சே அவாளும் கேட்டு, வெகு சந்தோஷமாச்சு, இன்னும் அந்த வன்னிவன க்ஷேத்திர மகிமை உண்டானால் சொல்லவும் என்று கேட்கச், சூதர் சொல்லுகிறார்.

பெண்ணுக்கு மாங்கல்ய பிச்சை கொடுத்த லீலை

நருமதா நதி தீரத்திலே அகளங்கப்பட்டணம் என்று ஒரு தலம். அதிலே அக்னிசர்மன் என்று ஒரு பிராமணன் இருந்தான். அவனுக்குத் ஸ்ரீதர்மவதி என்ற பத்தினி இருந்தாள். இப்படி இருக்கும்பொழுது, அவன் பிள்ளை யில்லாமல், தவசு செய்துகொண்டு வரும்பொழுது, சிவ கடாட்சத்தினாலே அவனுக்கு சைதவதி என்று ஒரு கன்னிகை இருந்தாள்(பிறந்தாள்). அந்தக் கன்னிகை வளர்ந்து பிரௌடையானதினாலே[1] அக்னிசர்மாவும் இந்தக்கன்னியை நம்முடைய ஜாதியாயிருக்கிற நல்ல பிராம்மணவானா யிருக்கும் ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கவேணு மென்றும் அப்படி இல்லாமல் தாமதமானால் வெகுதோஷங் கள் வந்து சம்பவிக்குமென்றும் யோசனை செய்துகொண்டு இருக்கும்பொழுது, வடக்கேயிருந்து ஒரு பிராமணப், பிள்ளை பிரும்மச்சாரியாய் யதேச்சையாய்ப்[2] புறப்பட்டு அக்னி சர்மாவினுடைய கிருகத்துக்கு[3] வந்தான்.

அப்பொழுது அக்னிசர்மா வாசலில் வந்து, அந்தப் பிரும்மச்சாரிப் பிள்ளையைக்கண்டு, இவனுக்கு நம்முடைய

---

1 பருவம் எய்தியதால்.
2 யாரும் எதிர்பாராத நிலையில்.
3 வீட்டிற்கு.

கன்னிகையை விவாகம் பண்ணிக் கொடுப்போமென்கிற தாய் எண்ணி சந்தோஷஸ்தனாய் அந்தப் பிரும்மச்சாரியை அருகில் அழைத்து வாரும் பிள்ளாய், நீ எங்கே இருந்து வந்தாய்? நல்ல வர்ச்சஸ்[1] உள்ளவனாயிருக்கிறாய். நம்முடைய பங்கில் ஈசுவரன் உன்னை இங்கே கொண்டு வந்து விட்டார். நீ வந்ததே மகாபாக்கியமாச்சு, நம்முடைய கிருகத்திலே இரு என்று சொல்லியவுடன் அந்தப் பிரும்மச்சாரியும் நல்லதென்றதினாலே நல்ல முகூர்த்தம் பார்த்து, அக்னி சர்மா தம்முடைய குடும்ப சுற்றத்தார்களை உடனே அழைத்துக் கன்னிகையை அந்த பிரும்மச் சாரிக்கு யதாவிதிப்படி பாணிக்கிரஹணம்[2] செய்து கொடுத்தார். கொடுத்த தினத்தன்றே தானே அகாரணமாய்[3] இறந்து போனான். இதை அக்னிசர்மா அவருடைய சுற்றத்தார் அனைவரும் கண்டு இதென்ன காரணமோ ஏதோ தெரியவில்லை என்று நாநாவிதமாக[4] மிகவும் பிரலாபித்து சுவாமி பரமேசுவரா (நீர்) மகா தயாசாலி அன்றோ! நீர் திரிபுரசம்ஹாரி[5] அன்றோ, இப்படி அகாரணமாய் இந்தப் பெண்ணை விவாகம் பண்ணின பிள்ளை இறந்து போக என்ன காரணமோ? சுவாமி ரட்சிக்கவேணும், ஐயா என்று இந்தப்படியாகவும் பிரலாபிக்கும்பொழுது சுவாமியினுடைய கிருபாகடாக்ஷத்தாலே நாரதர் அக்னி சர்மாவினுடைய கிருகத்துக்கு வந்தார். அவரை அக்னி சர்மா, தர்மவதி, வேதவதி அவர்களுடைய சுற்றத்தார் அத்தனை பேரும் கண்டு எதிரே போய் நமஸ்கரித்து அவரை அழைத்துக்கொண்டுவந்து ஆசனம் அளித்து அவரிருந்த ... ... நாரதருடனே இந்த பூர்வோத்திர[6] விருத்தாந்தத்தைச் சொல்லிப் பிரலா

---

1 அந்தணர்களுக்குரிய கர்மாக்களை உரிய முறையில் செய்து வருகிற காரணத்தால் தோற்றத்தில் ஏற்படும் ஒளி.

2 கன்னிகாதானம் என்று இருக்கவேண்டும்.

3 இன்ன காரணமென்று குறிப்பிடப்பட முடியாதவாறு.

4 பற்பலவிதமாகப் புலம்பி.

5 முப்புரம் எரித்தவர்.

6 இந்த நிகழ்ச்சிக்கு முன்பின் நடந்தவற்றை.

பிரசாதினாலே அவர் சிவனை இரண்டு நாழிகையிலே தியானம் செய்து சிவானுக்கிரகத்தினாலே அக்னிசர்மா. தர்மவதி முதலான பேரைப்பார்த்து கேளுங்கோள் அக்னி சர்மா தர்மவதியே, இந்தப்பெண் பூர்வ ஜென்மத்திலே கௌரிவிரதம் அனுசரித்துக்கொண்டு வந்தாள். இப்படி அனுசரிக்கிற நாளையிலே அது விரத சமாப்தி[1] ஆகின்ற போது கௌரி விரத உத்யாபனம்[2] பண்ண மறந்து போனாள். ஆனபடியினாலே இத்தனை துக்கமுண்டாயிற்று. லோகத்திலே விரத உத்யாபனம் பண்ணாத பேரும், விபசரிக்கிறபேரும், மகிஷதானங்களை[3] வாங்குகிற பேரும் பிற பத்தினிப்பெண்டிரை விருப்புகிறபேரும் மூன்று ஜென்மத்திலே ஸ்திரி ஜாதியாய் பிறந்து பால்யத்திலே. (இளமையில்) புருஷனை சாகக்கொடுத்து, விதவை ஜென்மத்தை அடைவார்களாக(கள்).

எனவே இவள் கௌரி விரத உத்யாபனம் பண்ணாததினாலே விதவைத்வம் வந்து பிராப்தியாயிற்று. (சேர்ந்தது) ஆனால் என்ன? இப்பொழுதும் அந்த கௌரி விரதத்தை ஆசரிச்சு[4] உத்யாபனம் பண்ணி வந்தால், இவளுடைய கணவன், இறந்து போனவன் உயிர்பெற்று, எழுந்திருப்பான் என்று சொல்லச்சே உடனே அக்னி சர்மாவும், தர்மவதியும் கேட்டு சந்தோஷஸ்தாளாய் வாருமய்யா நாரதரே. எங்கள் பங்கில் இறைவனாக நீர்வந்து ரட்சிக்க உபாயம் சொன்னீர். இப்பொழுது அந்த கௌரி விரதம் எந்த புண்ணிய தலத்தில் ஆசரிக்க வேண்டும் என்று கேட்கும் பொழுது நாரதரும்,

---

1 முடிவுறுகிறபோது.

2 விரதத்தை நிறைவு செய்வதற்காக உள்ள சடங்குகளைச் செய்தல்.

3 எருமை மாட்டை தானமாகப் பெறுவது.

4 முறைப்படி செய்து.

இப்படிக் சுடர்பவனத்துக்குத் தென்மேற்கு மூலையில் மூன்று யோசனை[1] தூரத்திலே வடபத்ரசாயி[2] என்ற ஒரு விஷ்ணு ஸ்தலம் இருக்கிறது. அதற்கு அடுத்த தென்மேற்கு மூலையில் அரைநாழிகை வழி தூரத்திலே வன்னிவனம் என்று ஒரு புண்ணிய க்ஷேத்திரமும், பிரும்மதீர்த்தமெனப் பட்ட தடாகமும் இருக்கிறது. அங்கே திவ்விய லிங்க மூர்த்தியாய் பரமேசுவரனும் எழுந்தருளியிருக்கிறார்.

ஆனபடியினாலே அந்த க்ஷேத்திரத்திலே போய் அந்த சுவாமியை தேவியை உள்ளிட (சுவாமியுடன் தேவியை) பூஜை செய்து அங்கே கௌரி விரதம் அனுசரித்து உத்யாபனம் பண்ணினால் அந்த சுவாமி, தேவியினுடைய அருளினாலே இந்தக் கன்னிகையினுடைய புருஷனாயிருக்கிற உன்னுடைய மாப்பிள்ளை பிழைத்து எழுந்திருப்பான் என்று சொல்லச்சே அக்நிசர்மா (வும்) தர்மவதியும் சந்தோஷமடைந்தபின் நாரதர், புதுவை என்னப்பட்டதாம் மகாபுண்ணிய க்ஷேத்திரம். துருவாசர் மாத்யஞ்சனதியான காஷ்டருக்கும் சுவாமி நடனம் காண்பித்து மோட்சம் கொடுத்தார். ஆக அங்கே போய் கௌரிவிரதமாசரித்து உத்யாபனம் பண்ணினால், அதனாலே இவள் புருஷன் எழுந்திருப்பான் என்று இந்தப்படியாக நாரதர் சொல்லும் பொழுது அக்நிசர்மாவும் தர்மவதியும் நல்லதென்று, நாரதருக்கு நமஸ்காரம் பண்ணி உபசாரங்களும் பண்ணினதனாலே தயாசாலியான நாரதரும் அக்னிசர்மா தர்மவதியுடனே அந்தக் கன்னிகையையும் வன்னிவனத் தலத்துக்குப் போகச்சொல்லி நியமிச்சு உத்திரவளித்து (நாரதர்) தம்முடைய யதாஸ்தானத்துக்குப் போய்விட்டார்.

பிறகு அக்நிசர்மா மிருதமான (இறந்த) மாப்பிள்ளையை எண்ணெய்க் கொப்பறைக்குள்ளே சரீரம் பதனமாயிருக்கும்படிக்கு வைத்துப் போட்டு பாந்தவ்யத்தாரான

1 ஒரு யோசனை என்பது 4 முதல் 5 மைல் தொலைவு என்பர்.

2 ஆலிலைமேல் பள்ளிகொண்ட பெருமான்.

(உறவினருடன்) கன்னிகையுடனே கூட தர்மவதியையும், கூட்டிக்கொண்டு அந்த வன்னிவனத் தலத்திற்கு வந்தார். வந்து வைகாச மாதத்திலே பிரும்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி வன்னி வனத்திலே இருக்கிற பரமேசுரனை சேவித்து ஆனந்த பாஷ்பம் (ஆனந்தக் கண்ணீர்) விட்டு சுவாமியை தோத்திரம் செய்து "சுவாமி என்னுடைய கன்னிகையை விவாகம் பண்ணின மாப்பிள்ளை அகாரணத்திலே மரிச்சுப்போனான். ஆனபடியினாலே அவனைப் பிழைப்பூட்டி ரட்சித்து விடுமய்யா" என்று சொல்லி அக்நி சர்மா பிரார்த்திக்க பரமேசுவரன் தயாசாலியாய் 'வாரும் பிள்ளையே அக்நிசர்மாவே! நீ பண்ணின தோத்திரத்தினாலே நாம் சந்தோஷத்தை அடைந்தோம். உனக்கு வேண்டிய வரம் தருகிறோம் கேள். இப்போது நம்முடைய வாம பாகத்திலே (இடது பக்கத்தில்) தேவி இருக்கிறாளே அந்தத் தேவியை உத்தேசித்து கௌரி விரதம் பண்ணினால் உன் கன்னிகையினுடைய புருஷன் பிழைத்து எழுந்திருப்பான்" என்று அனுக்கிரகம் பண்ணின தி(து)னாலே அக்நி சர்மாவும், தர்மவதியும், கன்னிகையாயிருக்கிற வேதவதியைக் கூட்டிக்கொண்டு தேவியினுடைய சன்னிதிக்குப் போய் தேவியைத் தரிசனம் பண்ணி "கேளுமம்மா, தேவி! என்னுடைய கன்னிகை உம்முடைய கௌரிவிரதம் ஆசரிச்ச போது உத்யாபனம் பண்ணாமல் போனதால், இப்போ(து) அவளுடைய புருஷன் மிருதமாய்ப்போனான். எனவே உன்னுடைய சந்நிதிக்கு வந்தோமானபடியினாலே, அவளைக் கடாட்சிச்சு விடவேணும் அம்மா. (இப்போது) நான் இங்கே என்னுடைய கன்னிகையைக் கொண்டு உம்முடைய கௌரி விரதம் ஆசரிச்சு உத்யாபனம் பண்ணி விடுகிறேன் என்கிறதாக, தேவியை பிரார்த்தித்ததினாலே, தேவியும் பக்தர்களைக் கடாட்சிக்கும் பொருட்டு பார்வதியம்மன் அந்த கௌரி விரதம் ஆசரிக்க வேண்டியவிதம் சொல்லுகிறாள்.

வேதிகை(மேடை) அமைத்து கடஸ்தாபிதம்(புனிதநீர் நிறைந்த குடம்) பண்ணி யதாவிதிப்பிரகாரம் (முறைப்படி) கௌரிவிரதம் ஆசரிச்சு சோடசோபசார[1] பூஜையும் பண்ணி உத்தியாபனமும் செய்தால் அதற்குமேல் உன்னுடைய மாப்பிள்ளை அகாரணமாய் மிருதமாய் (பிணமாய்) கிடக்கிறவன் ஜீவிச்சு (பிழைத்து) எழுந்திருப்பான் என்று.

இந்தப்படி சொல்லும்பொழுது அக்நிசர்மாவும், தர்மவதியும் நல்லதென்று யதாசாத்திர விதிப்படிக்கு கௌரி விரதம் தம்முடைய கன்னிகையைக்கொண்டு ஆசரிக்கச் சொல்லி அதற்குண்டான விதிவத்தாகவே உத்தியாபனமும் செய்ததினாலே தேவிக்கு சந்தோஷமாய். (அப்போது) "அவன் பிழைச்சு எழுந்திருப்பான்" என்று அக்நிசர்மா தர்மவதிக்குக் குங்குமம் கொடுத்து அனுப்பிவைத்ததினால் அக்நிசர்மாவும் தன்னுடைய ஸ்திரீ கன்னிகையுடனே கூடப் புறப்பட்டு சுவாமியினுடைய சன்னிதானத்திலே சேவித்ததினாலே ஸ்வாமியும் சந்தோஷத்தை அடைந்து "வாரும் பிள்ளாய்! அக்நிசர்மாவே! நீங்கள் இங்கே வந்து நம்முடை(டைய) சேவை பண்ணி கௌரி விரதமும் ஆசரிச்சதினாலே இனியேல் உன் மாப்பிள்ளை இந்தக் கன்னிகையினுடைய புருஷன் பிழைச்சு எழுந்திருப்பான் என்று விபூதி தந்தருளுகிறோம் வாங்கிக்கொண்டுபோ" மென்று சொல்லி அந்தப் படிக்கு விபூதி கொடுத்து. "இதைக் கொண்டுபோய் அந்தப் பிராமணப் பிள்ளையாண்டான் சரீரத்து மேலே போடுங்கள். அப்போ அவன் எழுந்திருப்பான்" என்று சொல்லி அனுப்பிச்ச(த்த)படியினாலே அந்தப்படிக்கு அக்நிசர்மா தர்மவதி அந்தப் பெண்ணுள்பட சந்தோஷஸ்தாளாய் அனுபவிச்சுக்கொண்டு தங்களுடைய பட்டணத்திற்குப் போய் கிரகப்பிரவேசமான (வீட்டில் நுழைந்த) பின் தேவி ஸ்வாமி கொடுத்த விபூதியையும் குங்குமத்தையும்

---

1 16 வகை உபசாரங்கள் (இறை வழிபாட்டுக்குரிய)

அந்த பிரேதமாயிருந்த (பிணமாயிருந்த) பிள்ளையாண்டான் சரீரத்திலே போட்டதனாலே அவன் நித்திரை பண்ணினவன் (போல்) எழுந்திருந்து வெகுவாகப் பரமேசுவரனை ஸ்தோத்திரம் பண்ணிச் சரீரமெல்லாம் புளகாங்கிதமானான்.

இப்படி இருக்கச்சே அக்நிசர்மாவும் மாப்பிள்ளை எழுந்திருந்ததைக் கண்டு மிகவும் சந்தோஷஸ்தனாய் நாரதரால் அன்றோ இவன் பிழைக்க வழி உண்டாச்சு என்று அவரை பஹுதா (பலவாறு) ஸ்தோத்திரம் பண்ணி, அதற்குமேல் மிருதமாயிருந்து பிழைச்ச ஜீவன் ஆனபடியினாலே புனஹ (மறுபடியும்), நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம் மற்றும் பண்ணவேண்டிய பிராயச் சித்தங்களெல்லாம்[1] யதாவிதிவத்தாகப்பண்ணி, உபநயனம் பண்ணிவிச்சு விரதமும் பண்ணி விதியுக்தப்படிக்கு விவாஹமும் பண்ணுவிச்சார். பிற்பாடு அந்த மாப்பிள்ளைக்கும் தம் பெண்ணுக்கும் வேண்டிய ஆடை, ஆபரணம், திரவியம், பால்பசு சகலமும் (யாவும்) கொடுத்து அவாளும், இவாளும் (அவ்விரு இனத்தாரும்) தனித்தனியே சிறிது நாளிப்படி சம்சாரமாகவேயிருந்து சுகமனுபவிச்சு சரீராந்தத்திலே (இறக்கும் தறுவாயில்) சகலரும் சிவசாயுச்சியமடைஞ்சாள் (ந்தார்கள்).

---

1 பிறந்த குழந்தைகளுக்கு ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு சடங்குகளைச் செய்யவேண்டிய விதிகளில் பிறந்த 6-வது மாதத்தில் உணவு கொடுத்தல், பெயர் வைத்தல், 3—5—7 வயதுகளில் தலைமயிர் நீக்குதல் (சௌளம்), பிரம்மோபதேசம் எனும் காயத்ரி உபதேசம். அப்பால் வேதங்கள் கற்றபின் 'ஸமாவர்த்தனம்' எனும் விரதஸ்னானம் செய்வித்தல் முதலானவை இவை ஸம்ஸ்காரங்கள் எனப்படும். பிராயச்சித்தங்கள் அல்ல,

வன்னிவனத்திற்கு மிருதசஞ்ஜீவிவனம் எனப்பெயர் வரக் காரணம்

நைமிசாரண்ய வாசிகளுக்குச் சூதர் வன்னிவன க்ஷேத்திர மகிமையை(ச்) சொல்லுகிறார்,

திருவாரூர், சிதம்பரம், காசி க்ஷேத்திரம் மூன்றிலேயும் ஜநிக்க(பிறக்க), தரிசிக்க, மரிக்க, மோட்சம். இந்த வன்னிவன க்ஷேத்திரத்திலே மரித்தவன் பிழைத்தபடியினாலே "மிருதசஞ்சீவிவனம்" என்று பெயராச்சு (து). அந்த க்ஷேத்திரத்திலே ஒருநாள் வாசம் பண்ணினாலும் மோட்சமுண்டு. சந்தேகமில்லையென்று கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானம் பண்ணினால் எத்தனை பலனோ அதுக்கு எட்டுக் குணம்(பங்கு)பலன் அதிகமாயிருக்கும். இந்த பிரும்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணினாலும், வாசம் பண்ணினாலும்(வசித்தாலும்) அவனுக்குச் சிவஸாயுஜ்யமுண்டு. தப்பாது. (நிச்சயம்) பிரும்மதீர்த்தமென்கிறது பிரபஞ்சசாகரத்துக்கு ஒரு தெப்பம் போலவும் வன்னி க்ஷேத்திரம் கைலாசத்திற்கு ஒரு ஏணி போலவும் ஆகும் என்று இந்தப்படியா(க) சிவன் பேரிலாணையிட்டுச் சொன்னார்.

கொடிய பாபியும் முக்தி பெற்ற வரலாறு

கோதாவரிக்கு வட தீரத்திலே (கரையில்) தர்மசாலை என்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்திலே வைதிக ஆசமசைவனான ஒரு பிராமணனுண்டு. ……… ………என்று ஒருத்தனுண்டு. அவர் நித்யம் பிராம்ம முகூர்த்தத்திலே[1] எழுந்திருந்து ஊருக்கு நிர்ருதி திக்கிலே (தென்மேற்கு) போய் சௌசாதிகளை[2] முடித்துக் கொண்டு, ஸ்நானம் பண்ணி நித்ய கர்மானுஷ்டானங்களானபின் 'வைச்வதேவ'[3] பூஜை பண்ணிக்கொண்டு இந்தப்படி தன்னிட சிலதர்மத்துனே நடந்துகொண்டு இருக்கிற நாளையிலே அவனுக்கு சுசீலை என்று ஸ்திரீ ஒருத்தி இருந்தாள். அவளும் மிகவும் பதிவிரதா தர்மத்திலே வல்லவளாய் பர்த்தாவினிடம் சித்தாநுகுணமாகவே (மனதுக்கு ஏற்றவளாக) நல்ல குணவதியான ஸ்திரீயாய் இருந்து பர்த்தாவுடைய மனதுக்கு சரியாக கிருகக்ருத்யம் (வீட்டு வேலைகள்) பார்த்துக்கொண்டிருப்பாள். அவளுக்குக் கெற்போற்பத்தி பத்து மாதம் சென்று ப்ரஸூதி (பிரசவ) காலமாய் புத்ரோற்பத்தியானதினாலே (பிள்ளை பிறந்ததால்) அந்தப் பிராம்மணனும் அந்தப் பிள்ளைக்குப் பனிரெண்டாம் நாள் நாமகரணமும், பன்னிரண்டு வயசாறதுக்குள்ளாக எந்தெந்தக் காலத்திலே எந்தெந்தக் கர்மங்கள் வித்யாப்யாசங்கள் பண்ணி வைக்க வேணுமோ அதெல்லாம் பண்ணி வைத்து அந்தப் புத்ரனும் சகல சாஸ்திர வித்தைகளிலேயும் சமர்த்தனாய்ப் பதினாறு வயதாயிற்று. இப்படிப் பதினாறு வயதாயிருக்கிற நாளிலே

---

1 விடியற்காலையில் சுமார் 4½ மணி முதல் 5 மணி வரையிலான காலம்.

2 காலைக் கடன்களை.

3 அந்தணருக்கு விதிக்கப்பட்ட ஆறுவகைக் கடமைகளில் டணவருந்துவதற்கு முன் செய்யப்பட வேண்டியது.

அவன் தன்னிட ஸ்வதர்மத்தை விட்டு தூர்த்த[1] குடிகாரனாய் பரஸ்திரீகளுடனே சர்பாஷணை பண்ணிக்கொண்டு துர்த்தானங்களை[2] வாங்கியும், துர்ஜனங்களுடன் த்யூதங்களாடியும்[3] சோரத்தனம்[4] பண்ணியும் இந்தப்படியாக(த்) தன் தேசம் விட்டு, வடதேசத்து கங்கா தீரத்திலே போய் எங்கும் சஞ்சரிக்கச்சே அங்கே ஒரு கூத்தாடிச்சி மோகினி ஸ்திரீயைக் கண்டு அவள் பேரிலே ஆசை கொண்டவனாய் அவளுக்குத் தானங்களை வாங்கின திரவியமும் சோரத்தனம் பண்ணின திரவியமும் இதெல்லாம் கொடுத்துச் சிறிது நாள் அவளுடனே கூடி இஷ்டமாய் இருக்கச்சே இவனுக்குக் கையிலிருந்த திரவியமும் (செல்வமும்) போய் ஆதாயத்துக்கு (வருமானத்திற்கு) அவகாசமில்லாமல் போவதாய் அந்தக் கூத்தாடிச்சி இவனை அடித்துத் துரத்திவிட்டு, கூடு மிவனை அவளுக்கு ஊழியம் (ஏவல்தொழில்) செய்து வரச்செய்து அவனும் அவளுடைய உச்சிஷ்டம் (சாப்பிட்ட எச்சில்) தின்று கொண்டு இப்படிச் சிறிது நாளிலிருந்து அவள துக்கும் (அவள் அதற்கும்) சம்மதியில்லாமல் துரத்திவிட்டதினாலே அவ்விடம் விட்டுப் பாண்டிய தேசத்திலே வந்து மதுரைத்தலம் சேவித்து இந்த வன்னிவன க்ஷேத்திரப் பட்டணத்திலே இருக்கின்ற தாசிகளைக் கண்டு ஒரு தாசி வீட்டிலே போய் அன்னம் கேட்குப்பொழுது அவள் இவனிட தேஜஸைப்(இவனுடைய உடல் ஒளியைப்)பார்த்து, யக்ஞோபவீதம்(பூணூல்) இருக்கிறதைக் கண்டு நீ பிராமணனாக இருக்கிறாயே உனக்குத் தாசி வீட்டில் அன்னம் ஆமோ (உணவு ஏற்பது சரியாகுமா) என்னச்சே(என்று சொல்ல), இவன் ஆபத்துக்குப் பாபமில்லை என்று சொல்ல. பிராமணப் பிரமச்சாரியென்றதினாலே அப்போ அவள் நல்லதென்று அன்னம் கொடுத்து நித்தம் சாப்பிட்டுவிட்டு ராத்திரி கடைவீதியிலே படுத்திருந்து மறுநாள் உதயமான

---

1 தீயவனாக.

2 வாங்கக் கூடாத தானங்களை வாங்குதல்.

3 சூதாடுதல்.

4 திருடுதல்.

பின்னால் இந்தத் தாசி வீட்டுக்கு வந்ததும் அவனைக்கண்டு மயங்கிய இவள் இவனைக் கண்டு பூர்வோத்திரம் கேழ்ச்கச்சே இந்தப் பாசதரனும் தன் பூர்வோத்திரமும் சொல்லித் தான், காமுகனாய் (மத்யே) தன் கிருஹம் விட்டுப் புறப்பட்டுக் கூத்தாடிச்சியுடன் இருந்ததும், அவள் துரத்தி விட்டதும் சொல்லச்சே இந்த தாசி கேட்டு இப்படிப்பட்டவனுக்கு நாமும் நம்முடை கிருகத்திலுமிருந்து துரத்தலாகாது என்று நினைத்து அவனுக்கு ஒரு தொழிலைக் கற்பிக்க வேணுமென்று தீர்மானித்து, "வாரும் பிள்ளாய் பிராமணா, நீ என்னுடைய சிவபூஜைக்குப் பிரதி தினம் புஷ்பபத்ரங்களைக் கொண்டுவா. நான் தினமும் அன்னமும் இடமும் கொடுத்து மாசம் ஒருநாள் சயனத்திற்கு உன்னை அழைச்சு நடைப்பிச்சுக் கொள்ளுகின்றேன் என்ற(த)தினாலே இவன் நல்லதென்று அந்தப்படி, அந்த தாசிக்கு ஏவல் தொழிலாய் பத்ர புஷ்பம்[1] சிவ பூஜைக்குக்கொண்டு கொடுத்துக் கொண்டு வருவதாய் அவள் இவனுக்கு அன்னத்துக்கும் ஒரு வீட்டில் வழி பண்ணிக்கொடுத்து மாதம் ஒரு நாளைக்கு ராத்திரி இந்த பிராமணனைத் தன் வீட்டுக்கு அழைப்பிச்சுக்கொண்டு இந்தப் படியாக 3 வருஷம் நடப்பிச்சாள்.

இதிலே இவனுக்கு ஒரு மாசத்து முறை நாளிலே அந்த தாசிக்கு ஒரு நாயகன் திரவியஸ்தனாக[2] வந்து அவள் கிருகத்திலே கூடி இருப்பதாய் அந்த முறைதினம் இவனுக்குத் தப்பிப் போன நிமித்தம் இவன் அவளுக்குச் சிவபூஜைக்குக் கொண்டுவந்த பத்ர புஷ்பத்தையும் எறிந்து போட்டு, மறுநாள் மத்தியானப் முப்பதும் அந்த க்ஷேத்திரத்துக்கு வெளியிலே ஒரு அம்பலத்திலே போய்க்கிடந்து சாயங்காலமாயும் இவள் கிருகத்துக்கு போஜனத்துக்கும் வராமல் அங்கேதானே கிடக்கச்சே சந்த்ரோதயமானதி

---

1 வில்வம், அறுகம்புல், துளசி போன்ற பூஜைக்குரிய இலைகள்,

2 செல்வந்தனாக.

னாலே அந்த சந்திரனைப் பார்த்து இந்த தாசியை (பார்த்து) சந்திரனுக்கு ஒப்பாக வர்ணித்துப் பாடிக் கொண்டு விரகதாபத்தினாலே[1] பிரலாபித்துக்கொண்டிருந்து மன்மதயாதனை[2] பொறுக்கமாட்டாதவனாய் ஜீவிக்கவும் முடியாதவனாய் தன்னுயிரைப் போக்கிக் கொண்டான்,

யமதூதர்கள் இவனைப் பண்ணாத தண்டனை பண்ணி யமலோகத்துக்கு இழுக்கச்சே பரமேசுரன் தயா சாலியானதால் தன்னுடைய புண்ணிய க்ஷேத்திரத்திலே அன்றோ ஜீவிச்சான்! தம்முடைய பூஜை நிமித்தமாய்த் தாசியண்டையிலே அவளுக்கு ஏவல் தொழிலாக புஷ்பம் பறிச்சுக் கொண்டுபோய்க் கொடுத்தான். இப்படிப்பட்டவனை ரட்சிக்க வேணுமென்றே சிவ கணங்களை அனுப்பி அவனைக் கயிலாசத்திற்குக் கொண்டுவரச் சொன்ன(த)தினாலே, சிவகணங்கள் போய் யமபடாளை[3] அடித்து, அந்தப் பாசதரனைக் கைலாசத்திற்கு விமானத்திலே வைத்துக் கொண்டு போய் சுவாமி முன்னே விட்டு பாசதரனை யமதூதர்கள் வந்து இழுத்துக் கொண்டு போன போது தாங்கள் அவாளை அடிததுத் துரத்தினது பற்றிக் கூற அந்தப் பாசதரனும் பகுசா (பலவாறு) சுவாமியைத் தோத்திரம் பண்ணும்பொழுது சுவாமி சந்தோஷத்தராய்த் தம்முடைய சபையிலே இருக்கிறபேர் இவனுடைய சரித்திரம் என்ன சுவாமி இவனை யமபடாள் இழுக்கச்சே சிவகணங்கள் அவாளை அடிச்சதென்ன. இவன் பாபிஷ்டனாக இருக்க (கும்போதல்லவோ)வல்லோ யமபடாள் இழுத்தா(ர்கள்)ள் என்று கேழ்கச்சே பரமேசுவரனும் இவனுடைய சரித்திரமெல்லாம் தம்முடைய சபையிலே இருந்து கேட்கின்ற பேருக்குத் தெரியப்படச் சொல்லிச் சொன்னார்.

---

1 பிரிவுத் துயரத்தினாலே.

2 பயங்கரமான இன்பத் துயரம். (நரகத்திலுண்டாகும் வேதனையினும் கொடியது)

3 படாள்—யம தூதர்கள்

இவன் மகா பாபியானாலும், நம்முடைய புண்ணிய க்ஷேத்திரத்திலே வந்து வாசம் பண்ணி மரித்ததால் இவனைக் கைலாசத்துக்கு அழைப்பிச்சோர் என்றபொழுது யமதூதர்கள் யமதர்மராஜனண்டை வந்து, "தங்களை சிவகணங்கள் அடிச்சுதாக்கும். மஹாபாபி(வி)யாயிருக்கிற இவனைக் கைலாசத்துக்குக் கொண்டு போனான்(ர்கள்) என்பதாய் (சொல்ல) தர்மராஜா பரமேசுரனண்டைக்கு இப்படியானால் அதிகாரமென்ன இருக்கிறது? என்(று சொல்லிவந்த போது)னச்சே பரமேசுப(வ)ரனும் நம்முடைய புண்ணிய க்ஷேத்திரத்திலே வாசம் பண்ணி மரிக்கிறவன் எத்தனை பாபிஷ்டனானாலும் சரி, நாமவனுக்கு மோட்சம் கொடுப்போம். ஆகக்குள்ள(ஆகவே) நீர் இன்று முதல் அந்த வன்னிவன க்ஷேத்திரத்திலே பாபிஷ்டாளாக இருந்து மரிச்சாலும் அவர்ளிட(ர்களுடைய) வழி போக வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டு, யமன் தன் லோகத்துக்குப் போனபின் இந்தப் பாசதரனை தம் மண்டை இருக்கிற சிவகணங்களுடனே நீயும் ஒரு கணமாயிரு என்று கட்டளையிட்டார். இப்படி கட்டளையிட்டு நம்மையாதொருத்தர் சிவராத்திரி தினத்திலே பூஜை பண்ணுகின்றார்களோ, அன்று ஜாகரணம் (இரவு கண் விழித்தல்) பண்ணினாளோ, ஸ்மரிக்கிறாளோ அவர்கள் எல்லாம் நம்முடைய சாயுஜ்ய பதவியை அடைவார்கள்" என்று சொன்னார்.

தேவமித்திரனுக்கு வெள்ளைக் குஷ்டம் தீர்த்தது

பாண்டிய தேசத்தில் பாடலிபுரமென்று ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே தேவமித்திரன் என்ற ஒரு அரசன். அவன் மகா நீதியுடனே அந்தப் பட்டணத்திலே இருந்து ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு பரமேசுவரனை சர்வ காலமும் தியானம் பண்ணிக்கொண்டு சிவாலய மண்டபங்கள், பிராகாரங்கள் இல்லாத இடங்களுக்கு மண்டபங்கள், பிராகாரங்கள் கட்டுவிச்சுக்கொண்டு தலங்களுக்குப் பூஜையும் நன்றாக நடப்பிச்சுக்கொண்டு இந்தப்படி இருந்தான்.

இப்படி இருக்கச்சே தேவமித்திரன் என்கின்ற ராஜா. பூர்வ பாபத்தினாலே வயிற்றிலே குஷ்டம் உண்டாயிற்று. அந்தக் குஷ்ட ரோகம் பிராப்தியானதினாலே ராஜா வெகு கிலேசப்பட்டுக் கொண்டிருக்கச்சே மார்க்கண்டேய ரிஷி அங்கே வந்தார். வந்ததினாலே ராஜா அவருக்கு ஆசனம் கொடுத்து சோடச உபசாரத்தினாலே பூஜை பண்ணினான். இப்படிப் பண்ணின பின் மார்க்கண்டேயரும் சந்தோஷப்பட்டு "வாரும் பிள்ளாய் ராஜாவே, நீ மகாதர்மசாலி சாதுர் வர்ணத்திலே இருக்கிற மனுஷ்யனையும் அவரவரிட ஸ்வதர்மத்துடனே நடப்பிக்கிறாய். சிவத்யானமும், சிவபூஜையும் பண்ணி(னு)வித்திருக்கிறாய் இப்படி சிவபக்தியுடனே கூடி நீ பக்திசாலியாயிருக்கிறபடியினாலே உன் மகிமை கேட்டு நாமிந்த பட்டணத்துக்கு வந்து உன்னைப் பார்த்தோம்.

இனிமேலும் இந்தப்படிக்கே நீதியாக ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டு சிவபூஜையும் ஆசரிச்சுக் கொண்டு ஸ்ரீமத் காரியங்களும் நன்றாக நடப்பிச்சுக்கொண்டுவா. அதனாலே உனக்கும் அநேக சிரேயஸு (நன்மைகள்) உண்டாகும். நீ பண்ணின உபசரணம் நமக்கு மிகுந்த

சந்தோஷமாச்சு. நாம் இனிப்போய் வருகிறோம் என்னச்சே அந்த தேவமித்திரன் என்கின்ற ராஜா வாரு மய்யா. நீர் என்பங்கிலே பரமேசுவரனாக வந்தீர். உம் முடைய சரணாரவிந்தம் இன்றைக்கு தரிசித்தபோதே நான் "கிருதகுருத்தியனானேன்(பாக்கியவான்). இப்பவும் தேவ ரீர் என் பேரிலே க்ருபா கடாட்சிச்சு இவ்விடத்துக்கு வந்தீரே. எனக்கு வயிற்றிலே குஷ்ட்டரோகமாச்சு. அத னாலே வெகு கிலேசப்படுகிறேன்.

இது பரிகாரமாகிற வழியாக யாதும் ஒரு உபாயம் சொல்லி ரட்சிக்க வேணுமய்யாவென்று மிகவும் பிரார்த் திச்சதனாலே மார்க்கண்டேயரும் தயாசாலியாக மிக்க நல்லதென்று சிவனைத்தியானம் பண்ணி பிற்பாடு ராஜா வைப் பார்த்துக் "கேளும், பிள்ளாய் ராஜாவே, நீ பூர்வம் எட்டாம் ஜன்மத்தில் ஒரு தரித்திரனிட வஸ்திரத்தை அப கரிச்சுக் கொண்டு போனதினாலே இந்த ரோகம் பிராப்தி யாச்சு.

இப்பவும் இது பரிகாரமாகிறபடிக்கு மதுரைக்குத் தென்மூலை நாலு யோசனை தூரத்திலே வடபத்ரசாயிக்கு நிர்ருதி[1] மூலையாக ஒரு புதுவை நகரமென்று மகா புண்ய க்ஷேத்திரத்திலே, பிரம்மதீர்த்தமும், லிங்கமும் இருக்கிறது. அங்கே போய் அந்த தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி அந்த சிவலிங்கத்தைத் தெரிசிச்சுப் பூஜையும் பண்ணினாயானால் இந்தக் குஷ்ட ரோகம் போய்விடுமென்று இந்தப்படியாக சொன்னதினாலே ராஜாவும் சந்தோஷஸ்தனாய் மிகவும் மார்க்கண்டேயரைத் துதித்து அவருக்கு கிழங்கு, சுந்த மூல (வேர்). பலாதியளுமழைப்பிச்சுக் கொடுத்து சைத்யோப சாரம் பண்ணி அனுப்பி அவர் போனபின் தான் தன்னு டைய பட்டணம் விட்டுப் புதுவை நகரப் பட்டணத்துக்கு வந்து பிரம்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, ஹேம தீர்த்தத்திலேயும் வைய்யாசி (வைகாசி) மாதத்திலே

1 தென்மேற்கு மூலை.

சுவாமிக்குக் கொடி ஏற்றி விச்சு (வைத்து) ரதோத்ஸவமும், தீர்த்தவாரியும் நடப்பிச்சு சுவாமிக்கு அநேக ஆடை ஆபரணங்களும் கொடுத்து மகாபிஷேகமும் பண்ணிவிச்சு (வைத்து) பிராமணருக்கு, அனேக கோதான, பூதான ஷோடச மகாதானங்களும், வஸ்த்ர தானங்களும் பண்ணி இந்தப்படி நடப்பிச்சதினாலே பரமேசுவரனும் தயா சாலியா ஆக அந்த ராஜாவுக்கு, பிரத்யக்ஷமாய் அவனிட குஷ்ட ரோகத்தையும் விபூதியைக் கொடுத்துப் போக்கு விச்சு சரீராந்தத்திலே சிவசாயுஜ்யமும் கொடுத்து ரட்சிச் சார் என்றார்.

இப்படிப்பட்ட ஸ்தலத்திலே யாதொருத்தன் பூஜையும் பண்ணி தான தருமங்களும் பண்ணி சிவபக்தியாயிருந்து நடந்து கொண்டிருக்கிறானோ இந்த ஹேம தீர்த்தத்திலே யாதொருவர் ஸ்நானம் பண்ணினாரோ அவாளுக்கு சகல பாபத்திலிருந்தும் விடுபட்டு சிவ சாயுஜ்யமடைஞ்சு (ஏற் பட்டு) சுகமாயிருப்பார்கள். இந்த ஸ்தலத்திலே தர்மம் பண்ணி இந்த சுவாமி சேவை பண்ணினால் பெரிய புண்ணியம் அளவிடப்போகாது. அபிவிருத்தியாயிருக்கு மென்று இந்தப்படி நைமிசாரண்ய வாசியளுக்கு சூதர் சொன்னார்.

வன்னிவன நாதருக்கு அகஸ்தீசுவரர் எனப் பெயர் வந்த வரலாறு

பூர்வம் தேவர்கள் பிரும்ம லோகத்திலே பிரும்ம சபையிலே இருந்து சகல வேத சாத்திரங்களும் (களையும்) ரிஷீஸ்வராளோடே சொல்லி பிரஸ்தாபித்துக் கொண்டிருக்க, சரஸ்வதிதேவி சமீபத்திலே இருக்க, இந்தப்படி பிரும்மதேவருடைய சபையிலே வேதாந்த ஞானங்களைச் (கருத்துக்களைச்) சொல்லி பிரஸ்தாபம் நடக்கச்சே வாமதேவ ரிஷீஸ்வரரும், அகத்தியருமாக பிரம்மதேவனண்டைக்குப்போய் வர வேணுமென்கிறதாய்ப்புறப்பட்டு, பிரம்மலோகத்துக்குப் போய் பிரும்மதேவர் சமஸ்த ரிஷீஸ்வராளுடனே வேதாந்த ஞானம (கருத்துக்களைச்) சொல்லிக் கொண்டிருக்கிற பிரும்ம சபையிலே போகச்சே, பிரும்ம தேவரி சபையிலே உட்கார்ந்திருந்த சகல ரிஷீஸ்வராளும் அகத்தியர் வாமதேவரைக் கண்டு எழுந்திருந்தார்கள்.

அவா அவா ஒருத்தருக்கொருத்தர் வந்தன நமஸ்காரங்கள் பண்ணின பின் பிரும்மதேவரும், வாமதேவருக்கும் அகத்தியதேவருக்கும் ஆசனம் கொடுத்து இவாள் இரண்டு பேருமாக பிரும்மதேவரிட(ருடைய) ஆசனத்துக்குச் சரிசமானமாயிருக்கிற ஆசனத்திலே பிரும்மாவினிட சமீபத்திலே உட்கார்ந்திருக்கச்சே(பொழுது) அங்கே நாரதரும் வந்தாராகக்குள்ள (வந்தமையால்) அவருக்கும் புறம்பாக பிரும்ம தேவர் ஆசனம் கொடுத்து இருந்தபின் நாரதர், அகஸ்தியர் (ரையும்)வாமதேவரிஷியைப்(யும்) பார்த்து "வாரும் அகஸ்தியரே. நீர் வாமதேவருடனே கூட பிரும்ம தேவரிட(ருடைய) ஆசனத்துக்குச் சமானமாக இருக்கிற ஆசனத்து மேலே இருக்க உமக்கு அதிகாரமுண்டா? எப்படி நீர் அவருடனே சரியாக இருப்பீர்? வாமதேவரிஷி மகா பெரியவர், அவருடைய தபோ மகிமையினாலே அவரை ஈசுவரனுக்கு சமானமென்று சொல்லப்படும்.

அவர் சிவனிடத்தில் பண்ணின பக்தியினாலே அவர் பரமேஸ்வர சுரூபமே சரி ஆகக்குள்ள (சிவபெருமானுடன் சமமாக ஆனபொழுது) அப்படிப்பட்டவருடனே நீர் கூடி சரியாசனத்திலே இருக்க யோக்கியம் (தகுதி) போறாது (போதாது) என்று சொல்லச்சே அகத்தியருக்கு மனக்குறையாய் கிலேசப்பட்டுக் கொண்டினாலே அதைப்பார்த்து நாரதர் வாரும் அகஸ்தியரே. நீரிப்படி மனக்குறைப்பட வேண்டாம். இப்பொழுதும் வாமதேவரிஷி கூட பிரும்மாவினிட ஆசனத்திற்கு சமானமாக இருக்கிற ஆசனத்திலே இருக்கவேணுமெனில் (இருக்கவேணுமென்றால்) பூலோகத்திலே கடம்பவனத்துக்குத் தென்மேற்கு மூலையாயிருக்கிற வன்னிவன க்ஷேத்திரத்திலே போய் பிரும்ம தீர்த்தத்திலே, ஹேம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி அங்கே திவ்யலிங்க மூர்த்தியாயிருக்கிற பரமேசுவரனைப் பூஜித்து சேவித்தீரானால் அப்போ அவாள் சிவபெருமானைப் பார்த்து வாமதேவருடனே கூடி பிரும்மதேவரிட ஆசனத்துக்கு சமானமாயிருக்கிற ஆசனத்துமேலே இருக்கச் சொல்லி வரம் கொடுத்து அனுக்கிரஹம் பண்ணினால் அப்போ வந்து சரியா இருக்கலாம். மற்றபடிக்கு இருக்கக் கணக்கில்லை என்று இப்படிச் சொல்லி அப்போ (சொன்னபொழுது) அகஸ்தியரும், ஆசனத்திலிருந்து இறங்கினதினாலே பிரும்மதேவரும் கொளு தீர்ந்து சமஸ்தரிஷிகளும் அவாளுடைய யதாஸ்தானத்துக்குப் போனதினாலே அகஸ்தியரும் பிரும்மலோகம்விட்டுப் புறப்பட்டுப் பூலோகத்திலே இருக்கிற வன்னிவன க்ஷேத்திரத்துக்கு வந்தார் என்று இந்தப்படியாக சூதர் நைமிசாரண்ய வாசிய(க)ளுக்குச் சொன்னார்.

நைமிசாரண்ய வாசிய(க)ள் அந்த க்ஷேத்திரத்து மகிமையும், அகத்தியர் அந்தத் தலத்துக்கு வந்து தபசு பண்ணினதும் சொல்லுமய்யா வென்று கேழ்க்கச்சே சூதர் சொல்லுகிறார்.

அகத்தியர் வன்னிவன க்ஷேத்திரத்திலே வந்து சுவாமி தமக்கு ஆசிரமம் கட்டி பிரும்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி அந்த ஆசிரமத்திலே.................மூணு வருஷம்மட்டும் இருந்துக்குன பிறகு பரமேசுவரனையும். விதிவத்தாக சோடச உபசார பூஜையள்(கள்) பண்ணிக் கொண்டு அனேகமாயிருக்கப்பட்ட வேதமந்திரங்களாலும், காயத்ரியினாலேயும் தபசு பண்ணி இந்தப்படி நடந்து கொண்டிருக்கச்சே பரமேசுவரனும் மகா சந்தோஷத்தை அடைஞ்சு பார்வதி சமேதராய் ரிஷபாரூடராய் அகஸ்தியருக்கு பிரதியக்ஷமாய் நீர் பண்ணின தபசினாலும் பூசையினாலும் நமக்கு வெகு பிரீதியாச்சுது என்றார்.

கேளும் அகஸ்தியரே. உமக்கு வாமதேவரிஷியுடனே கூட பிரும்மாவினிட ஆசனத்துக்குச் சரிசமானமாக இருக்கிற ஆசனத்திலே இருக்க வரம் தந்தோம் என்று சொல்லி அநேக உபசாரமும் பண்ணி நீர் நம்மை பூஜை பண்ணினதினாலே இன்றுமுதல் நமக்கு அகத்தீசுவரன் என்று உம்முட(டைய) பேரும் கூட விளங்கக்கடவுது என்று சொல்லி பொதியமலைக்குப் போமென்று அனுப்பித்தாமும் தம்முட(டைய) லிங்கத்திலே அந்தர்த்தானம் பண்ணிப் போனார். ஆகக்குள்ள (ஆகையினால்) அகஸ்தியர் பூஜை பண்ணின நாள் மூதல் அகஸ்தீசுவரன் என்று பேராச்சு என்று இந்தப்படி நைமிசாரண்ணிய வாசிய(க)ளுக்கு சூதர் சொன்னார்.

சிவத்வஜனுக்குப் படிக்காசு கொடுத்தருளியது

பிற்பாடு வடதிசையிலேயிருந்து .... நாக நம்பி யென்று ஒரு சிவத்வஜன்[1] தன்னுடைய ஸ்திரீயையும் கூட்டிக் கொண்டு மதுரை முதலான பல தலமும் சேவித்து வன்னிவன க்ஷேத்திரத்திலே வந்து இந்த தலத்து மகிமை என்ன வென்று விசாரிக்குமிடத்தில் அகத்தியர் பூஜை பண்ணி னதும், துர்வாசர் பூஜை பண்ணினதுமான மகாக்ஷேத்திரம் என்று, இந்தப்படி இந்தத் தல ஆகமங்களைக் கேட்டதி னாலே அந்த சிவத்வஜனும் நாமிந்த வன்னிவன க்ஷேத்தி ரத்திலே இருக்கிற பரமேசுவரனைப் பூஜை பண்ணிக் கொண்டு வரவேணுமென்கிறதாய் சன்னிதிக்கு .... தனக்கிருக்க ஆசிரமும் கட்டி சிவனுக்கு ஹேமதீர்த்தத் தையெடுத்து அபிஷேகம் பண்ணி நன்றாக விதிவத் தாகவே பூஜை பண்ணிக்கொண்டு வந்தான்.

இப்படிச் சிறிதுநாள் பூஜை பண்ணிக் கொண்டு வரச்சே, க்ஷாமகாலம் (பஞ்சகாலம்) வந்து கேவலம் இவ னுக்கு தொக்கையாய் (இடையூறாக) எங்கும் காரியம் சொல்லக் கிடையாமல் போய், நாலாறு நாள் உபவாசம் பண்ணி, இப்படி இருக்கச்சே ஒருநாள் சிவனுக்கு அந்த உபவாசத்துடனே ஹேமதீர்த்தத்தை எடுத்து அபிஷேக பாத்திரம்(த்தை) கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்க பெலனில்லாமல் (பலம்) கை(கய்) நழுவி சிவனுடைய சிரசிலே விழுந்ததினாலே அந்த சிவத்வஜன் பார்த்தபோது வெகு அபசாரம் வந்தது என்று (துயரப்) பட்டு எப்போ இத்தனை அபசாரம் வந்ததோ நாமிந்த சிவனுக்கு ஆசைப்படத் தேவை இல்லை. நம்முடைய ஜீவனைப்(யும்) போக்கடிச்சுக் கொள்ளுகிறதே சரி என்று எண்ணினான்.

---

1 சிவ பக்தியுடைய அத்தணன்.

பிறகு சன்னிதி வாசல் படிக்கட்டு மேலே வந்து அந்தக் கல்லிலே முட்டிக்கொள்ள வேணுமென்று உத்தியோகப் படச்சே (முயற்சிக்கும்பொழுது) ஸ்வாமி கண்டு பக்த பராதீனரானபடியினாலே ஒரு ஆகாச வாக்கு உண்டு பண்ணி "வாரும் பிள்ளாய், சிவத்வஜா, நீயெனதுகாலிலே பிராணனைப் போக்கடிக்கிறாய். பாத்திரத்தை நீ யென்மீது போட வேணுமென்று போடவில்லையே, உன் வயிற்றுக் கில்லாமல் நீ உபவாசமிருப்பதால் பலகீனமாய் (அது) கைநழுவி விழுந்தது அதனாலே குற்றமில்லை நீ அங்க லாய்க்கவேண்டாம்.

இப்பொழுதும் உனக்கு நான் தினமொரு மாடக்காசு நம்முடைய சன்னிதிப்படி மேலே வைககிறோம். நீ அதைக் கொண்டு போய் விற்று அந்தப் பணத்தை வாங்கி நமக்கும் பூஜாபிஷேக நைவேத்யம் பண்ணி நீயும் ஜீவன உபாயம் பண்ணிக்கொண்டு இரு. நாம் படிக்காசு வைக்கிறதை நீ ஒருவரிடமும் சொல்ல வேண்டாம். ரகசியமாய் இருக்கட் டும்" என்று சொன்னார்.

இப்படியாகச் சொல்லி, மறுநாள் அவனுக்குப் படிக் காசு, வச்சதினாலே அந்த சிவத்வஜன் அந்தக் காசை எடுத்துக்கொண்டு, புதுவை நகரத்துக்குக் கிழக்காக நொச்சிப்பட்டணம் என்று ஒரு பட்டணம் உண்டு. அதிலே அகிலன் செட்டி என்று ஒரு வர்த்தகன் இருந்தான். ஆக அந்தப் பட்டணத்திலே போய் இந்த மாடக்காசை அந்த அகிலன் செட்டி வசத்திலே கொடுத்தான். அவன் அதை வாங்கி அந்தக் காசுக்குண்டான 25 பணமும் சரிவரக் கொடாமல், எட்டுப் பணத்தைக் குறைச்சுக் கொடுத்து, இதுக்குப் பதினாறு பணம்தான் உண்டென்று, இந்தப்படி கொடுத்துக்கொண்டு வரத்துவங்கினான்.

ஆனபடியினாலே இந்த சிவத்வஜனும் அதை வாங்கி, வேணுமென்கிற சாமக்கிரியைகளை (வாங்கி)க் கொண்டு வந்து பரமேசுவரனுக்கும் அபிஷேகபூஜை நைவேத்யங்

களைப் பண்ணி(ஹுவித்து)விச்சுத் தானும் சுகமாய் சாப்பிட்டுக்கொண்டு இப்படியாக மூணுவருஷ(ம்) மட்டும் நடந்துகொண்டு வந்தான்

இதிலே க்ஷாமம் தெளிஞ்சு இந்த சிவத்வஜனுக்கும் சிறிது உடமை நட்டுமுட்டுக்கு அவகாசமுண்டாச்சு. இப்படி இருக்கச்சே, இவனிட ஸ்திரீயானவள் ஒரு நாள் சிவனை[1] அழைத்து இந்த க்ஷாமத்திலே நமக்குப் பசியாமல் உண்டென்று சாப்பிடவும், பத்துப் பணத்துக்கு ஈடாக சிறிது தட்டுமுட்டு உண்டாகவும் காரணமென்ன ? இதுக்கு வரலாறு எப்படி உண்டாச்சு? எங்கேயாகிலும் கன்னமிட்டாயோ இல்லாமல் இந்த சுவாமியி(னிட)னுடைய உடமையைத் திருடினாயோ ? அந்த விபரம் எனக்குச் சொல்லும் என்னச்சே, இவன் சொல்லப் போகாது என்று மாட்டோமென்னச்சே. அவள் "சொன்னால் அல்லாமல் ஆகாது" என்று அளிச்சாட்டி[2] பிடிச்சதினாலே 'இப்படி சுவாமி தினமொரு மாடைக்காசு படிமேலே வைத்துக்கொண்டு வந்தார். அதனாலே தப்பிச்சோ'' மென்று நடந்த பூர்வோத்திரமெல்லாம் தன் ஸ்திரீயுடனே சொன்னான் .... சுவாமி அன்று முதல் படிக்காசு வைக்கிறதை விட்டுவிட்டார்.

ஆக(க்குள்ளே) இந்த சிவத்வஜனுக்கு இப்புறம் நாளுக்குநாள் அன்னத்துக்கு வழி இல்லாமல் தட்டுப் பட்டது. ஆனபடியினாலே சுவாமி சன்னிதியிலே போய் சுவாமியைப் பெரிதாகப் பிராத்திச்சு சுவாமி, உம்மை நம்பின எனக்கு இப்புறம் படிக்காசு வையாமல் உபேட்சை (அலட்சியம்) பண்ணலாமோவென்று பெருசா (பலமுறை) வியாகூலப்பட்டு அங்கலாய்க்கச்சே,

சுவாமி பக்த பராதீனராக ஆகாச வாக்கு உண்டாக்கி வாரும் பிள்ளாய்! " நீயும் சொன்னபடி கேளாமல் ரகசிய

---

1 சிவத்வஜனை,

2. பிடிவாதம்.

மாக இருக்கட்டுமென்ற வார்த்தையை, உன் ஸ்திரீயுடனே சொல்லிவிட்டாய். அதனாலே நாம் காசு வையாமல் போனோம்" என்னச்சே அந்த சிவத்வஜன் சுவாமி! நான் எத்தனை தப்புப் பண்ணினாலும் அதை க்ஷமிச்சு ரட்சிக்கிற பாவம் உம்முதல்லோ (உம்முடைய தல்லவோ) என்று வியாகூலப்பட்டுச் சொல்லுவதாய், சுவாமியும் ஆனால் ஒரு உபாயம் சொல்கின்றேன் கேள். நாளை நாமே புறப்பட்டு வந்து உனக்கு பெருசா திரவியம் வாங்கித் தருகிறோம். நீயும் நாளை அந்த அகிலன் செட்டி வீட்டிலே வரணும், நாமும் அவனிட (னுடைய) மாமனாரைப் போலே வேஷம் போட்டுக்கொண்டு வருகிறோம். நாமும் அவனும் கூடி இருக்கச்சே நீ அவனிட(ம்) கிட்ட வந்து வாரும் பிள்ளாய், அகிலன் செட்டி! உன் பேரிலே நமக்குச் சிறிது வியாஜ்யமுண்டு. நாம் 25 பணம் பெறத்தக்க மாடைக் காசைக் கொண்டு வந்து கொடுத்தவிடத்திலே நீ நமக்குப் பதினாறு பணம் வீதமன்றோ கொடுத்துக் கொண்டு வந்தாய். நாமிதுவரைக்கும் உன் வசமா பெருகாசு (வெகுகாசு) கொண்டுவந்து கொடுத்தோமே. அதுகளுக்கு எல்லாம் நீ கொடுத்த பதினாறு பணமும் போகக் குறைக்காசு ஒன்பது பணம் வீதம் நாளது வரைக்கும் நாம் உன் வசம் கொடுத்த காசுக்கெல்லாம் கணக்குப்பண்ணி உண்டான பணத்தைக் கொடு என்றும் நான் கொடுத்த வராகனைக் கொண்டுவாடா இந்தச் செட்டியாருக்குக் காண்பிக்க வேண்டும் என்றுமிந்தப்படியாக ஏட்டிக்குப்போட்டி சொல்லி வியாஜ்யம் (வழக்குத்) தொடுத்து இழுத்துக் கொண்டிரும். நாம் மத்யஸ்தம் போலே குற்றத்தை அவன் பேரிலே சுமத்தி உன்னையும் சாடையாய் போவென்று அனுப்பிவிட்டு அவன் வசமிருக்கிற திரவியமெல்லாம் அவனை விட்டு உனக்குத் தருகிறேன் என்று சொன்னார்.

இந்தப்படியாய்ச் சொல்லச்சே அந்த சிவத்வஜனும் நல்லதென்று மறுநாள் காலமே அந்தப்படி அந்த அகிலன் செட்டி மாமனார் ரூபமாய் செட்டி வேஷம் தரித்துக் கொண்டு சிறிது கல்லையும் கறட்டையும் எடுத்துக்கொண்டு

நல்ல மாணிக்கமாக்கி ஒரு பையிலே கட்டிக்கொண்டு அந்த செட்டி வீட்டுக்குப் போகச்சே, அந்த அகிலன் செட்டி இவரைக்கண்டு வாருமென்று அழைச்சுப்போய் வீட்டிலே உட்கார்ந்தபின் இவா பூர்வோத்தரம் முடிய[1] அவன் மாமனார் ரூபமாகச் சிறிது யோக க்ஷேமங்களைச் சொல்ல, "வாரும் பிள்ளாய்! நாம் இதுவரைக்கும் கப்பல் வராததால் கரை துறைவாக கேதா(ரம்)[2] போய் இருந்தோம். இப்போ கப்பல் வந்தது. ஆகக்குள்ள இவிடத்துக்குர் ஒரு காரியமாய் வந்தோம்" என்று இப்படிச் சொல்லி அங்கே உட்கார்ந்திருக்கச்சே,

அதுசமயம் இந்த சிவத்வஜன் அங்கே போய் சுவாமி சொன்னபடிக்கே அவனை வழக்குத்தொடுத்து இழுக்கச்சே அவனிடம் தாறுமாறாகச் சொல்லி நான் கொடுத்த காசைக் கொண்டு வாரும், இந்தச் செட்டியாருக்குக் காட்டுவோமென்றதனாலே அவன் ஒரு காசை எடுத்து இவன் வசம் கொடுத்து இவன் அந்தச் செட்டியாருக்குக் காண்பிச்சவிடத்திலே அவர் உரசிப் பார்த்து இதுக்கு நீ இந்த பிராமணனுக்குக் காசு ஒன்றுக்குப் பணம் எப்படிக் கொடுத்தாய் என்று கேட்க(கேட்டார்.)

அப்பொழுது அகிலன் செட்டியும் 16 பணம்தான் கொடுத்தேன் என்னச்சே, அட வைத்தியக்காரா! இப்படி பிராமணன் உடமைக்கு ஆசிப்பார்களோ (ஆசைப்படுவார்களோ) என்று அவனைக் கூப்பிடறாப் போலே கூப்பிட்டு இந்த பிராமணனுக்கு ஒருவித உடன்படிக்கைப் போலே சொல்லி "உன் உடமை எங்கே போனது? வரும்போ" வென்று சிவனை(சிவத்வஜனை) அனுப்பிவிட்டு தானந்த அகிலன் செட்டியுடனே "கப்பலிலே நல்ல நல்ல சரக்கு வந்திருக்கிறது, நமக்குச் சிறிது திரவியம் வேணும். மாணிக்கம் நல்லதா வந்திருக்கின்றது. அதை நீ வாங்க

---

1 ஒருவரை ஒருவர் நலம் விசாரிக்கும் நடைமுறை முடிந்ததும்.

2 வார்த்தைத் தெளிவில்லை.

வேண்டும். உன் வைத்திலே ஏதாலுமுண்டானால் தருகிற மிப்போ" (தருகிறோம் இப்போது) என்று இப்படிக் கேட்டுத்தாம் கட்டிக்கொண்டு போயிருக்கிற மாணிக்கத் தையும் அவாளுக்குக் காண்பிக்கச்சே (காண்பித்தார்).

அந்த அகிலன் செட்டி பின்னையும் அநேக வர்த்தகர் களை அழைப்பிச்சு, இந்த ரத்தின(ம்) மாணிக்கங்களை அவாளுக்குக் காண்பிக்கச்சே அவாளதை(அவர்கள் அதை) உரைச்சுப்பார்த்து இது விலை மதிக்கப்படாத (முடியாத) மாணிக்கம். இதற்குண்டான லக்ஷணங்கள் மிக நன்றாக இருக்கிறது என்றுமி(ம்இ)ப்படிக்கொத்தது. நாமெல்லாம் கொள்ளமாட்டுவோமோ (என்று) இந்தப்படிச் சொல்லி அவர்கள் புறப்பட்டுப்போனதினாலே இந்த மாணிக்கம் மாத்திரம் எனக்குத் தாரும் என்று கேட்பதாய், இவரும் கொடுத்துப் பதினாயிரம் பொன்மட்டும் அவன் இவருக்குக் கொடுத்ததினாலே வாங்கிக்கொண்டு நாம் போகிறோ மென்னச்சே அந்த அகிலன் செட்டி விருந்து சாப்பிட்டுப் போமென்பதாய்(ச்சொல்ல) இவனும் வெளியே போய்த் திரும்ப வருகிறோம் என்று சொல்லி அந்தப் பணத்தைக் கொண்டு தம்முடைய ஸ்தானத்திலே வந்து அந்தத் திரவி யத்தை அந்த சிவத்வஜனுக்குக் கொடுத்துத் தாமும் தம்மு டைய லிங்கத்திலே அந்தர்த்தானம் பண்ணிப் போனார்.

பிற்பாடு இந்த அகிலன் செட்டி இரண்டு மூன்று நாள் பொறுத்து, அந்த மாணிக்கங்களை எடுத்துப் பார்க்கச்சே அதெல்லாம் கல்லும் கரடும் ஓட்டாங்கச்சியும் ஆகப் போனதினாலே பார்த்துப், "பாருமய்யா! நம்முடை மாமனாரைப் போலே ஒரு செட்டி வந்து நம்மை மோசம் பண்ணிப் புறப்பட்டுப் போனான்" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, வெட்கப்பட்டுத் தன்னு டைய பேர்களுடனே சொல்லச்சே அவாள் நீ யாருக்குத் துரோகம் பண்ணினாயோ தெரியாது. ஆக இப்படி வந்தது என்னச்சே, இந்தச் செட்டியும் நான் ஒருத்தருக்

குர் துரோகம் பண்ண இல்லை. ஒரு சிவத்வஜ பிராமண னுக்கு மாத்திரம் 25 பணம் பெற்ற மாடக்காசுக்கு எட்டுப் பணம் குறைச்சுப் பதினேழு பணம் கொடுத்து வந்தேன். அது மாத்திரமுண்டு என்று சொல்லி பிற்பாடு அந்தப் பெந்துக்களா இருக்கிற செட்டியாள் (மார்கள்) அந்தப் பிராமணனைக் கேளும் பிள்ளாய், அந்தச் செட்டி வந்த போது அவனும் கூட வந்தானே. நீ கொடுத்த காசை அவனுரைத்துப் பார்த்தானே. அதிலே கருவுண்டு என்ப தாய். அகிலன்செட்டி புதுவை நகரத்துக்கு வந்து இந்த சிவத்வஜனை வழக்குத் தொடுத்து (கூறினான்).

வாரும் பிள்ளாய்! பிராமணர்(ரே) உன்னுடனே கூட வந்த செட்டி யார்? எவன்? நீ அறியாமல் இருக்கிறாயா? சொன்னாலாச்சு! இல்லாவிட்டால் நான் விடப்போற தில்லை யென்னச்சே அந்த சிவத்வஜன் நாவறிபேனென்று இந்தப்படி இருவரும் பூசலாடி அந்த சிவத்வஜ பிராமணன் உண்டானப்படி வர்மம் (ரகசியத்தை) வெளிவி(யி)ட்டுக் (கூறினான்.)

"கேளும் பிள்ளாய்! செட்டி! இந்தக் காசு சுவாமி கொடுத்தது. இதுக்கு இருபத்தஞ்சு பணமும் சரிவரக் கொடாமல் எட்டுப்பணம் குறைச்சுப் பதினேழு பணம் கொடுத்து வந்தாயே. ஆகக்குள்ள சுவாமியே வந்து என்னுடனே நீ நாளை(க்கு) போய் அகிலன் செட்டியுடனே வழக்காடு. உண்டான திரவியமெல்லாம் 25 பணமாக அளவிட்டுக் கொடுக்கிறோமென்றார். ஆகக்குள்ள நாம் வந்து வழக்குத் தொடுத்தோம். உன் மாமனார் ரூபமா வந்து உனக்கு மாணிக்கம் விற்று திரவியம் பறிச்சவா ஸ்வாமி யாக்கும் என்றதினாலே அந்தச் செட்டி பிரம்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி சுவாமி சன்னிதியிலே வந்து சேவிச்சு "வாரும் சுவாமி! உம்முட உடமையென்று அறியாமல் துரோகம் பண்ணினேன். இதைத் தொட்டுத்[1]

---

1 இதன் பயனாக.

தேவரீரே ஸ்ரீ பாதம்[1] நோக என் கிருகத்துக்கு[2] எழுந்தருளின போதே நான் கிருதக்ருத்யனானேன்[3]. முகுந்த பிரும்மாதிகளுக்கும் அறியப்படாத பாதாரவிந்த[4] தரிசனம் எனக்கு லபிச்சது[5] என்று இப்படிச் சொல்லி தோத்திரம் பண்ணி சேவிப்பதாய் இவனுக்கு ஞானம் உண்டாய்(கி) பின்னையும் தன் வசமிருந்த திரவியமெல்லாம் கொண்டு வந்து சுவாமியினிட (னுடைய) ஸ்ரீமத் காரியத்துக்கு விரயம்[6] பண்ணினதினாலே(னார்).

அதனாலே சுவாமி தயாசாலியா(னபடியால்) ஆகாச வாக்கு உண்டு பண்ணி "வாரும் பிள்ளாய் செட்டி! உன்னைப் போலே கொத்தவனிப்படி[7] பிராமணனுக்குத் துரோகம் பண்ணலாகாது. அப்படிப் பண்ணக்குள்ள (பண்ணியதால்). உனக்கு நாம் இப்படிப் பண்ணினோம். இப்போ(ழ்து). "நீ எப்போ பிரம்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி நம்முடைய சன்னிதிக்கு வந்தாயோ அதனாலே அந்தப் பாபமெல்லாம் போய்விட்டது. இப்ப நாம்(உனக்கு) மோட்சம் தந்தோம் என்று சொல்லி அந்த சிவத்வஜனையும் ரெட்சிச்சு சரீராந்தத்திலே அவனுக்கும் சாயுஜ்ய பதவி கொடுத்தார் என்று இந்தப்படி சூதர் நைமிசாரண்ய வாசிகளுக்குச் சொல்லச்சே (சொன்னார்).

அப்போது அவர்கள் சுவாமி! இந்தத் தலத்துக்குப் புதுவையென்று பேர் (பெயர்) வருவானேன் என்று கேழ்கச்சே சூதர் சொல்லுகிறார். கேளுங்கோள் ரிஷியளே.

---

1 திருவடி.

2 வீட்டிற்கு.

3 பாக்யவான் என்ற கருத்து.

4 தாமரை போன்ற திருவடி.

5 கிடைத்தது.

6 செலவு.

7 உன்னைப் போன்றவன்.

கிருதயுகத்திலே இது வன்னிவனம், திரேதாயுகத்திலே துர்வாசருடைய ஆசிரமம், துவாபர யுகத்திலே அகத்தீஸ்வரபுரம், கலியுகத்துக்குப் புதுவை. கலியுகத்திலே புதுவையென்றபேர் வருவானேன் என்றால் பிரம்மப்பிரளயம் வந்து ராஜ்யம் எங்கும்(உலகு எங்கும்) மூழ்கிப்போய் இருக்கச்சே பரமேசுவரன் இந்தத் தலத்திலே வந்து பிரம்ம பிரளயம் தீர்த்து, பிரும்மா விஷ்ணு முதலானவரும்(னோரையும்), லோகா லோகங்களும்(களையும்) சிருஷ்டிச்சு உண்டாக்கினபடியினாலே புதுமையாய் இருந்த நிமித்தம் புதுவையென்று பேராச்சு. இப்படி(இருக்கச்சே) இருக்கும் பொழுது சந்திரபகவான் கொடிய ரோகத்திலே அடிபட்டு இந்தத்தலத்திலே வந்து பிரம்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, சுவாமியைப் பூஜை பண்ணி(யதால்) பரமேசுவரன் சந்திரபகவானுக்கு ஏற்பட்ட கொடிய ரோகம் தீர்த்து அனுப்பிவெச்சார் என்று இந்தப்படி சூதர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொன்னார்.

* *
* *
*
*

ஆமுகம் தீர்த்தது

பரத்வாஜரிஷி தம்முடைய ஆசிரமத்திலே இருந்து புறப்பட்டு இந்த ஜம்பூத்தீவிலே வந்து காசி(ஆதி) முதலான ராஜ்யத்திலே உண்டான புண்ணிய தீர்த்தத்திலே எல்லாம் ஸ்நானம் பண்ணி அங்கங்கே உண்டான சிவத்தலங்களிலே போய் சுவாமிக்குப் பூஜை பண்ணி ஸேவித்துக்கொண்டு. மதுரைக்கு வந்து சுந்தரேசுவரர் — மீனாட்சியையும் ஸேவித்து ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு வந்து வடபத்ரசாயியையும் ஸேவித்து இந்தப் புதுவை க்ஷேத்திரத்திலே வந்தார்.

வந்து இது (என்ன) புண்ணிய க்ஷேத்திர'' மென்று அறிந்து இ(அ)வ்விடத்தில் ஆகமம்[1] விசாரிக்கும் பொழுது அகத்தியர் துர்வாசர் வந்து தபசு பண்ணினதும் (சிவபெருமான் மாத்யந்ஜன தியான காஷ்டருக்கு நடனம் புரிந்ததும் கேட்டு மிகவும் சந்தோஷஸ்தராய் பிரும்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, ஹோம தீர்த்தத்தை யெடுத்து சுவாமிக்குக் கொண்டு........விதிவத்தாக அபிஷேகம்(மும்) பூஜை(யும்) பண்ணி அபிஷேக சாமக்ரியை[2] அழைப்பிச்சு வந்திருக்கின்ற சமயத்திலே அவருடைய சிஷ்யனாய் இருந்த கோமுனி அபிஷேகத்திற்கு வந்திருந்த பசுவின் பாலை யெடுத்து ரிஷி(யைக்)காணாமல்[3] சாப்பிட்டதை அவர் கண்டு "அட பாபி! சிவாபிஷேகத்துக்கு வைத்திருந்த பாலை எப்படியடா எடுத்துக்குடித்தாய். இப்படி அகிருத்யம் பண்ணினபோதே' 'நீ ஆமுகமாக' போகக் கடவாய்'' என்று சபித்தார்.

---

1 வரலாறு பற்றி.

2 தேவையான பொருள்களை வாங்கிவரச் செய்து.

3 முனிவர் காணாமலிருக்கும் சமயம்.

4 பண்ணிய காரணத்தால் இப்பொழுதே.

அப்பொழுது அந்தக் கோமுனிவரும் "ரிஷியே! நான் அஞ்ஞானத்தினால் இப்படிப்பண்ணினேன். உம்மை நம்பி நான் அல்லாமல் மற்றப்படி அல்லவே எனக்குச் சாப விமோசனமாகிறபடி வழியையும் சொல்லி என்னை ரட்சிக்க வேணுமய்யா" என்று கேட்டதினாலே, பரத்வாஜரும் தயாசாலியாகக்குள்ள[1] "வாரும் பிள்ளாய்! இப்படி அஞ்ஞானாக்ருத்யம் (அகிருத்தியம்) பண்ணிவிட்டாயே, ஆனால் நல்லது. நீ இந்நாளிந்தப் பிரும்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி இந்தப் பரமேசுவரனைப் பூஜித்தாயானால் உனக்கு ஆமுகம் தீர்த்து ரட்சிப்பார்," என்றதினாலே அவன் நல்லதென்று அந்தப்படி (னாலு) நாலு நாள் பிரும்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி சிவனை விதிவத்தாக அபிஷேக நைவேத்யத்துடனே பூஜை பண்ணினதினாலே சுவாமி தயாசாலியாய்(ஆகி) அவனுக்கு சித்த(புருஷன்)ரூபமாக வந்து விபூதி கொடுத்து, ஆமுகம் தீர்த்து மோக்ஷமும் தந்தோமென்று பின் அவனும் பரத்வாஜ ரிஷியும் பழையபடி தங்களிட யதாஸ்தானத்துக்குப் போனார்களிப்படி சிவபெருமான் ஆமுகம் தீர்த்து ரட்சிச்சார்.

1 இரக்கம் மிக்கவராக இருந்தமையால்.

மிளகைப் பயறாக்கி அதை மிளகாக்கினது

சோழ மண்டலத்திலே இருந்து கும்பகோணத்து வர்த்தகர், மலையாளத்திலே போய் மிளகு பிடித்து 2000 பொதி மட்டும் ஓட்டிக்கொண்டு அழகாபுரிப் பட்டணத் திற்கு வந்து அவ்விடத்திலிருந்து இந்த புதுவை நகர வழி யாக வரச்சே சுவாமி சிவத்விஜரூபமா கோபுரவாசல் படிக் கட்டு மேலே வந்து இருந்து அந்த வர்த்தகரைப் பார்த்து வர்த்தகரே! இந்த சுவாமியினுடைய நைவேத்யத்துக்குப் பதார்த்தம் சமைக்கச் சிறிது மிளகு வேணுமது கொடுக்கி றீர்களா? என்று கேட்டவிடத்திலே அந்த வர்த்தகர் இது மிளகு அன்று பயறு எனச்சே "ஆகட்டும் போய் வாருங் கோள்" என்று எழுந்திருந்து தம்முடைய லிங்கத்திலே அந்தர்த்தானம் பண்ணினார்.

அந்தச் செட்டிய(ா)ளு(ரு)ம் மதுரையிலே போய்ப் பொதியைத் தள்ளி அவ்விடத்து வர்த்தகருக்கு விற்கப் பொதியைச் சொரிஞ்சு காண்பிக்கச்சே அந்தப் பொதி யெல்லாம் (பயறு) உளுந்தாயிருந்தது. அப்போ அந்த வர்த்தகர் இதென்ன காணும் (ஐயா) நாம் வரச்சே புதுவை நகரத்துக் கோபுர வாசலிலே அந்தக் கோவில் சிவத்விஜன் சுவாமிக்கு மிளகு வேணுமென்று கேழ்க்கச்சே பயறு என் றோமே, அவரிட மாயையினால்தான் இப்படியாச்சோ (இப்படியாயிற்றோ) தெரியாது என்று மதுரையை விட்டு அந்த வர்த்தகரெல்லாமிந்தப் புதுவை வனத்துக்கு வந்து பிரும்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி சுவாமியை சேவித் தனர்(சேவிச்சு).

"சுவாமி! உம்முடைய மகிமையை நாங்கள் அறியா மல் தப்ப(பு)ரை(பொய்) சொல்லிக் கெட்டுப்போனோம். ரட்சியும் அய்யாவென்று" பிரார்த்திச்சதினாலே ஆகாச வாக்கு உண்டாய் கேளுங்கோ செட்டிகளே! இப்போது மிந்தப் பயத்தை(பயற்றை) மிளகாக்கினால் அதை விற்று

அந்த திரவியத்தைக் கொண்டு வந்து நம்முட ஸ்ரீமத் காரியத்துக்குக் கொடுக்கிறீர்களானால் நாமப்படிப் பண்ணறோமென்னச்சே (பழையபடி மிளகாக்குகிறோமென்று சொல்லும்போது இந்த வர்த்தகர் நல்லதென்பதாய்(ஏற்கவும்) (சிவபெருமான்) சிவத்விஜனை விபூதி கொடுக்கச் சொல்லி அவன் கொடுத்த உடனே "இதைக்கொண்டு போயந்தப் பயறு மேலே போடுங்கோள் மிளகாகு"மென்ற நிமித்தம் அந்த வர்த்தகரும் நல்லதென்று அந்தப்படி விபூதியை வாங்கிக்கொண்டு போய், அந்த(பயறு) உளுந்து மேலே போட்டு அது மிளகாய்(மிளகாகி) (மிளகாக மாறியதால் அதை) விற்று அந்தத் திரவியமெல்லாம் கொண்டு வந்து, சுவாமியினுட டைய) ஸ்ரீமத் காரியத்துக்கு விரயம்[1] பண்ணி ஸேவிச்சதினாலே (சிவபெருமான்) "அவாளிந்த க்ஷேத்திரத்திலே ரெண்டுநாள் வாசம் பண்ணியதால் சரீராந்தத்திலே உங்களுக்கு மோட்சமும் தந்தோம், போங்கள்" என்று அனுப்பிவிப்பதாய் அவாள் தங்களிட (ளுடைய) பட்டணத்துக்குப் போய்ச் சிறிதுநாள் சுகமா(க) இருந்து சரீராந்தத்திலே சிவஸாயுஜ்யமடைஞ்சாள்(தார்கள்) என்று நைமிசாரண்யவாஸிகளுக்குச் சூதர் சொன்னார்.

---

1 செலவு செய்து.

மண்குடத்தைப் பொன்குடமாக்கியது

கேளுங்கோள் ரிஷிகளே! அந்தச் சமீவன க்ஷேத்திரத்திலே ஒரு பிராமணன் சசிதரன் என்று இருந்தான். அவன் பிரதி தினம்[1] பிரும்ம தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி அந்த மகாலிங்கத்துக்குத் திரிகாலத்திலேயும்[2] அபிஷேக நைவேத்யமும் பூஜையும் பண்ணிக்கொண்டு வருவான்.

இப்படி இருக்கிற நாளையிலே ஒருநாள் உச்சிக்கால அபிஷேகத்தின் போது மண் குடத்தைக் கொண்டு அந்த லிங்கத்துக்கு ஈசானிய மூலையாய் இருக்கிற கூபத்திலே[3] அபிஷேகத்துக்கு ஜலம் மொள்ள வேண்டிப்போய் மோக்கச்சே (மொள்ளும்பொழுது – சேந்தும்பொழுது) அந்தக் குடம் கைநழுவி விழுந்து போவதாய் அந்த சசிதரன் என்ற பிராமணன் வெகுதுக்கிதனாய்ப்[4] பார்த்தீரோ! இந்தக் குடம் நழுவிக் கிணற்றிலே விழுந்து போனபோதே இன்றைய) உச்சிகால அபிஷேகம் நின்று போனது. இனி வேறு இங்கே குடம் இல்லை. நாமினி நொச்சிப்பட்டணத்துக்குப் போய்க் குடம் கொண்டு வறதுக்கு(வருவதற்கு) முன் உச்சிக்கால வேளை தப்பிப்போம், என்ன செய்யப் போறோம்'' என்று இந்தப்படி மனோவியாகூலப்பட்டுக் கொண்டிருக்கச்சே (இருந்தான்).

அப்பொழுது சுவாமி இவனிட(டைய) சேதத்தைப்[5] போக்குவிக்க வேண்டி தம்முடைய லிங்கத்திலே இருந்து ஒரு பிராமணப்பிள்ளை ரூபமா(க) வெளியே புறப்பட்டு வடக்கே இருந்துவர(வருகிற) பாவனை போல இந்த சசி

---

1 தினந்தோறும்.
2 மூன்று வேளையிலும்.
3 கிணற்றிலே.
4 மிகவும் துயருற்றவனாகி.
5 துயரத்தை,

தரன் கிட்ட(அருகே)வந்து "வாரும் பிள்ளாய்! பிராமணா! நீ ஏன் அங்கலாய்க்கிறாய்?" என்னச்சே சசிதரனும் இப்படிக் குடம் விழுந்து போச்சு. உச்சிக்காலம் அபிஷேகம் நின்றுபோ(கி)றதா(க) இருக்கிறது என்று சொல்லியும் நானிறங்க, விருத்தாப்பியமானதினாலே என்னாலே ஆகா தென்று இப்படிச்சொல்லி அங்கலாய்க்கச்சே (அங்கலாய்த் தான்.)

அச்சமயம் பிராமணப்பிள்ளையின் ரூபமாய் வந்த சுவாமியும் நீ அங்கலாய்க்க வேண்டாம். நானெடுத்துத் தரு கிறேன் என்று சோமனைக்[1] கரையிலே வெச்சு சீக்கிரமா அதிலே(கிணற்றிலே) குதிச்சு முழுகி அதைப் பொன்குட மாக்கி எடுத்து இந்தப் பிராமணன் கையிலே கொண்டு வந்து கொடுக்கச்சே இவன் கண்டு அதிசயப்பட்டு இந்த மண்குடம் பொன்குடமாக வந்த காரணமேனவென்னச்சே "இந்தத் தீர்த்தத்தினுடைய மகிமை இது" என்று சொல்லி வெளியே போற பாவனை போலே அவனுக்குக் காண பிச்சுத் தம்முடைய லிங்கத்திலே அந்தர்த்தானம் பண்ணிப் போனார்.

பிற்பாடு இந்தச் சசிதரனும் அந்த சுவர்ணக்[2] குடத் திலே ஜலம் எடுத்து சுவாமிக்கு அபிஷேகம் பண்ணிப் பூஜை நைவேத்தியம் ஆனபின் ஸ்வாமி சந்தோஷஸ்தராய்த் தம் முடைய லிங்கத்திலே இருந்து பார்வதீசமேதராய் அவன் முன்னே ப்ரத்யக்ஷமாய் வந்து நின்று "கேளும் பிள்ளாய்! சசிதரா! நீ மகாபக்திசாலி, நீ பண்ணின பூஜை யினாலே நமக்கு வெகுப்ரீதியாச்சு: இந்தக் கிணறு ஹேம தீர்த்தத்தை வென்றதாகும். இப்போ(து) இதிலே விழுந்த மண்குடம் பொன்குடமானது பார்த்தாயா! இந்தத் தீர்த்த மகிமை அப்படி. (அவ்வளவு உயர்ந்தது) ஆகக்குள்ள(அத னால்) இதிலே ஸ்நானம் பண்ணினாலும் இந்த ஜலத்தை

1 இடையில் அணியும் ஆடை.

2 தங்கத்தாலான.

எடுத்து நமக்கு அபிஷேகம் பண்ணினாலும் அவன் பாபத்திலும்(பாபத்தினின்றும்) விடுபட்டு இந்த மண்குடம் பொன்குடமானாப் போலே பரிசுத்தனாய் நம்முடைய சாயுஜ்ய பதவியை அடைஞ்சு(ந்து) விடுவன். பாபமாகிற பஞ்சுக்கு பிரளயகாலாக்னி போலே. இந்தத் தீர்த்த மகிமை. என்னமோ என்று எண்ணாதே. உனக்கும் சரீராந்தத்திலே மோட்சம் தந்தோம்'' என்று இப்படிச் சொல்லி அந்த தீர்த்தத்தைப் பிரசித்தமாப்பண்ணித் தம்முடைய லிங்கத்திலே அந்தர்த்தானம் பண்ணிப்போனார்.

இந்தச் சசிதரனும் சிறிதுநாளிப்படி பூஜை பண்ணிக் கொண்டிருந்து, தன் வம்சத்துடனே சிவசாயுஜ்யமடைஞ்சான்(ந்தான்).

ஹேமதீர்த்தத்தினுடைய மகிமை இப்படி(யா) ஆகுமென்று நைமிசாரணிய வாசிகளுக்குச் சூதர் சொன்னார்.

வாணன் தலை வெடித்தது

வடதேசத்திலே இருந்து சேரன், சோழன், பாண்டியன் ராஜ்யம் பண்ணுகின்ற காலத்திலே ஒரு ராஜா 'வாணன்' என்று வெகு சேனையுடனே, ராஜ்யம் எங்கும் திக்விஜயம் பண்ணவேணுமென்று புறப்பட்டு மதுரைக்கு வந்து அந்த ஸ்தலத்திலே சுவாமியை ஸேவித்து மதுரையில் இருந்து புதுவை நகரத்துக்கு வந்தான்,

அப்போது இந்த ஸ்தலத்தார் எதிரே போய் அவனைக் கண்டு பிரசாதம் கொடுக்கப்போகச்சே அதை அசட்டை பண்ணி அவாளையும்(அவர்களை அனைவரையும்) அடிச்சு சுவாமியினுடைய கோபுர வாசலிலே வந்து சன்ன(னி)திக்கு எதிராகவே கூடாரம் போட்டுப் பாளையமிறங்கி ப்ரஜை களையும் இம்சை பண்ணிக்கொண்டிருந்தான்,

இப்படி இருக்கச்சே அந்த வன்னிவன க்ஷேத்திரத்திலே இருக்கிற சிவபக்தாள்(பக்தர்கள்) அந்த க்ஷேத்திரத்திலே இருக்கிற ஓடையிலே போய் தின(மு)ம் சுவாமிக்குக் கருநீல புஷ்பம்(நீலோற்பல மலர்) கொண்டு வருவாள்(வார்கள்). அதை இவன் கண்டு பிடி(டு)ங்கித்தான் மூன்று பங்கு எடுத் துக் கொண்டு ஒரு பங்கு சுவாமிக்குக் கொடுத்தனுப்பி அந்த க்ஷேத்திரத்துத் தீர்த்தத்திலேயும் ஸ்நானம் பண்ணா மல் சுவாமியையும் சேவியாமல் இந்தப்படியாகப் பண்ணிக் கொண்டு பத்து நாளிருக்கச்சே(நாளிருந்தான்) இவ்வாறு இருக்கும்போழ்து அந்த ஓடையிலே புஷ்பிக்கிற கருநீலப்பூ நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வந்தது. அதிலேயிருக் கிற மடல் புஷ்பத்தைச் சிவபக்தர்கள் எடுத்து வரச்சே அதி லேயும் பாதி பகுத்து எடுத்துக்கொள்ளுவான்.

இப்படி இருக்கச்சே பத்தாம் நாளந்த ஓடையிலே புஷ்பம் இருந்து அதை எடுத்து சுவாமிக்குக் கொண்டு

வரச்சே அதிலேயும் பாதி பறித்துக்கொண்டு, பாதியை ஸ்வாமிக்குக் கொண்டுபோவென்று கொடுத்தனுப்புவதாய் அன்றைய தினத்திலே அவனுக்குத் தலை வெடித்துப்போய் யமகிங்கரர்கள் வந்து அவனைப் புஷ்பம் பறிச்ச கையையும் மோந்த (முகர்ந்த) மூக்கையும் முடிச்ச தலையையும் சேதிச்சு[1] பண்ணாத யாதனைகள்[2] பண்ணி ரௌரவாதி[3] நரகத்திலே கொண்டு போய்ப் போட்டாள் (டார்கள்)

கர்விஷ்டனான அந்த அரசனின் தலை வெடித்துச் சிதறியது. நரகமும் லபிச்சது. அந்தத் தலத்திலே இப்படி சிவத்துரோகம் பண்ணினவனுக்கு நரகமே அல்லாமல் மோக்ஷகதி இல்லை என்று இந்தப்படிச் சூதர் நைமிசாரண்ய வாசியளுக்குச் சொன்னார்.

1 வெட்டி.

2 மிக பயங்கரத் துன்பம்.

3 பல்வகைத் துயர் தரும் நரகங்களில் கொடிய நரகமென்பர் (கருடபுராணத்தில்)

தாதனைக் கரடி ரூபமாய் வந்து தடுத்தாட் கொண்டது

ஸ்ரீவில்லிப்புத்தூரிலே இருக்கிற தாதனொருத்தன் மிகுதியும் விஷ்ணு பக்தனாக இருந்தான். சிவநிந்தனை பண்ணிக்கொண்டு இருப்பான்.

அவன் ஒருநாள் தெற்கே போகச்சே சிவாலயத்துக் கோபுரம் தெரியவந்தது என்று கொ(கு)டையாலே அதைத் தெரியாதபடிக்கு மறைச்சுக்கொண்டு நடப்பதாய் இதைச் சிவன் கண்டு கணநாதனை அழைப்பிச்சுக் கரடி ரூபமாய்ப் போய் அந்தத் தாதன் கண்ணைப்பிடிங்கி அவன் மார்பிலே வைக்கச்சொல்லிச் சொல்லுவதாய்ச் சொன்னார்.

அந்தப்படி கணநாதாள்(நாதர்கள்) கரடி ரூபமாய்ப் போய் அந்தத்தாதன் கண்ணைப் பிடிங்கி அவன் மார்பிலே வைத்து வருவதாய் யமதூதன் வந்து அவனைப் பண்ணாத தெண்டனை பண்ணி பூறுவ.............போட்டு அடித்து மறுபடி அவன் பூலோகத்திலே ஜனித்து பூர்வ[1] ஞானத்தை நினைத்துக் கொண்டு வன்னிவன க்ஷேத்திரத்திலே வந்து விபூதி ருத்ராக்ஷம் தரித்துக்கொண்டு சிவனை ஆராதித்துப் பூஜை பண்ணி சிவபக்தாளுக்குச் சுச்ரூஷை பண்ணுவதாய் அவனுக்குச் சரீராந்தத்திலே மோக்ஷம் கொடுத்தார் எனது சூதர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொன்னார்.

---

1 முற்பிறவி நிகழ்ச்சிகளை அறியும் அறிவாற்றல்.

மடிசிலை திரவியம் வாங்கினது

நொச்சிப்பட்டணத்திலே அகிலன் செட்டி என்று இருந்தவன் முன்(பு) சுவாமிக்கு அநேக திரவியம் கொடுத்துத் திருப்பணி கட்டிவிச்சு நடத்தினவன் பிற்பாடு தன் பட்டணத்திலே போய் நூறு பொன் மட்டும் வைத்துக் கொண்டு இவ்விடத்திலே வியாபாரம் பண்ணிக்கொண்டிருக்கச்சே அந்த மடிசிலை. ஒருநாள் விழுந்து காணாமல் போச்சு. (இதை)அந்த பரமேசுரனிட மாயை என்று அறிய மாட்டாமல் வீட்டிலே போய் வெகு கிலேசப்பட்டான். அப்போ ராத்திரி சொப்பனத்திலே சுவாமி போய் "வாரும் பிள்ளாய்! அகிலன் செட்டி! உன் பணம் நான் வரப்பண்றேன்(பண்ணுகிறேன்). அது வந்தாலதை நமக்கு ஸ்ரீமத் காரியத்துக்குத் தருகிறாயோ" என்று கேட்டு அவன் நல்ல தென்றதினாலே மற்றநாள் உதயத்துக்கு மடிசிலைப் பண்ண ....அவன் வாசலிலே கொண்டு போய்ப் போட்டுவிட்டார்.

அவன் அதைக் கண்டு எடுத்து ராத்திரி சொன்னபடி, சுவாமிக்குக் கொடுக்க முன்பின் பார்த்ததினால் ராத்திரி சுவாமி சொப்பனத்திலே போய் சூலத்தினாலே மாரிலே ஊனி(ஊன்றி) "ஏன் பிள்ளாய், பணம் கண்டால் நமக்குத் தருகிறோம் என்ற நீ இப்போ(து) முன்பின் பார்க்குறாய். கொடுக்குறோமென்ற பணத்தைக் கொடாமல் தீருமோ" என்னச்சே அவன் தரோமென்று சொல்லுவதாய் சுவாமி தம்முடைய யதாஸ்தானத்திலே வந்து விட்ட நிமித்தம் மற்றநாள் உதயத்திலே அகிலன் செட்டி அந்தப் பணம் (பணத்தை) எல்லாம் கொண்டுவந்து சுவாமியினுடைய ஸ்ரீமத் காரியத்துக்குக் கொடுத்துவிடுவதாய் அவன் தம்முடைய இடத்தில் பக்தி பண்ணி புண்ணிய க்ஷேத்திரத்திலேயும் வந்து. தம்மையும் சேவை பண்ணினான் என தயாசாலியாக(ன சிவபெருமான்) அவனுக்கு மோக்ஷம் கொடுத்தார்.

மதங்க ஸ்திரீகளுக்குத் "தியாகம்" கொடுத்தது

தாமிரபரணி தீரத்திலே இருக்கிற திருநெல்வேலியிலே இரண்டு மதங்க ஸ்திரீகள் அந்த நெல்வேலிநாதர் சன்னிதியிலே ஆடிக்கொண்டிருப்பாள் (பார்கள்). அவர்கள் இப்படி இருக்கச்சே அந்த தேசத்துக்கு க்ஷாமம்[1] வருவதாய்க்கண்டு "அவ்விடத்திலே பிழைப்பு இல்லை. நம்முடைய வித்தை அறிஞ்சுத் தியாகம்[2] கொடுப்பாருமில்லையென்று" அவ்விடம் விட்டு இந்த வன்னிவன க்ஷேத்திரத்துக்கு வந்து இவ்விடத்து மகிமைகளைக் கேழ்ப்பதாய் இந்த சுவாமியே நமக்குத் தியாகம் கொடுப்பாரென்று நிலவரம்[3] பண்ணி பிரும்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி சுவாமியை ஸேவிச்சு வந்ததுடன் அத்யந்தம் ரூபலாவண்யத்துடனே கூடியிருந்த அந்த ஸ்திரீகள் தங்களுக்குக் குலத்தொழிலாக வந்திருந்த நாட்டியக் கலையையும், சங்கீத ஸாகித்ய வித்தைகளையும் சிவார்ப்பணம் பண்ணுவதாய் ஸ்வாமி சன்னிதியிலேயிருந்து மனம் உருகிப்பாடியும், ஆடியும் தங்கள் துயரம் தீரும் காலம் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

ஆனால் அங்கே யாரொருத்தரும் அந்த மதங்க ஸ்திரீகளுக்குத் தியாகம் கொடுக்க இல்லாமல் போனதால் பசி பட்டினி யோடவே ஆடிப்பாட வேண்டிய நிலைமையாயிருந்தது. இதனால் அவாள் மிகவும் துக்கிதாளாய் தம் துர்பாக்யத்தை நெனச்சுக் கண்ணீர் பொங்க ஸ்வாமியினிடத்தில் தங்கள் குறைகளைச் சொன்னார்கள்.

"சர்வேச்வரா, நாங்கள் இருந்த பூர்வீகமான தாமிரபரணி தீரத்தில் க்ஷாமம் வந்ததென்றுதானே உம் சன்னி

---

1 பஞ்சம்.
2 பொருள்.
3 தீர்மானம்.

திக்கு வந்தோர். வந்தவிடத்திலும், எங்கள் குறை தீர வில்லை. உணவுக்கு வகை ஒன்றும் ஏற்பட மாட்டாமல் இருக்கிறோமே சகல ஐச்வரியங்களுக்கும் ஏக நாயகனான நீர் இந்த ஏழைகளின் துக்கத்தைப் போக்கலாகாதோ என்று பிரார்த்தித்து வழக்கம்போலவே சுவாமி சன்னிதியில், ஆடிப்பாடி முடித்து அவாள் தாங்கள் தங்கி இருக்கிற யதாஸ்தானத்திலே போய்ப் பசியாலும் ஆயாஸ மிகுதியாலும் மயக்கமாய்ப் படுத்து உறங்கச்சே சுவாமி அவாளிட நிருத்தியத்தினால் சந்தோஷப்பட்டு அவாளுக்குத் தியாகம் கொடுக்க வேண்டி ராத்திரி சொப்பனத்திலே வந்து "வாருங்கோள் மதங்க ஸ்திரீகளே! நீங்கள் நிருத்தம் பண்ணினவிடத்திலே தியாகம் வராமல் போச்செ(போயிற்று)ன்று விசனப்படவேண்டாம். மாடைத்தெரு வீதியிலே ஒரு பனைமரம் இருக்கிறது. அதன் கீழே வெகுத் திரவியம் இருக்கிறது. அதைப்போய் எடுத்துக்கொள்ளுங்கோள்" என்னச்சே அவாள் உடனே கண்ணை முழிச்சு அங்கே போய்ப் பார்க்குமிடத்திலே அந்தப் பனைமரம் சாய்ந்து, அந்த மரத்தடியிலே பார்த்து அங்கே வெகுத் திரவியம் இருந்து அதை எடுத்துக்கொண்டு சந்தோஷஸ்தாளாய் வன்னிவன க்ஷேத்திரத்திலே சிறிது நாளிருந்து சுவாமியினுடைய சேவை பண்ணி க்ஷாமம் கழிஞ்சபின் தங்கள் தேசத்துக்குப் போய் சுகமாயிருந்து சரீராந்தத்திலே சிவசாயுஜ்யமடைஞ்சார்கள்(அடைந்தார்கள்).

வலையனுக்குக் கண் கொடுத்தது

இப்படிப் பொதிய மாமலைக்கு வடக்கா(வடக்கில்) தர்மகிரி என்று ஒரு பர்வத[1]முண்டு. அங்கே சிலம்பாநதி என்று ஒரு நதி உண்டு. அதிலே அநேகமாக இருக்கப் பட்ட புஷ்ப விருக்ஷங்கள், பழ விருக்ஷங்கள்[2] இந்தப்படி சிங்காரமாகப் பூஞ்சோலை உண்டு.

அதிலே,..........அந்த மலைக்குக் கிழக்கே குறிஞ்சி நிலத்திலே சித்தூர் என்று ஒரு ஊர். அந்த ஊரிலே வலையர் தொழில் செய்பவர்கள் இருந்தார்கள் அவர்களில் தன் தொழிலில் குறியாயிருக்கிற வலையன் ஒருத்தன் சிறிது நாள் சுகமாக இருந்து விருத்தாப்பிய காலத்திலே அவனுக்குத் திருஷ்டி (கண்பார்வை) ஊனமாய்(கிக்) கண் காணவராத்தாய் அவன் வெகு கிலேசப்பட்டு இனி ஜீவனைப் போக்கடிச்சுக்கொள்ளுவோமென்று யோசனை பண்ணச்சே அவனுடைய பந்துக்களான வலையர்(கள்) இதை அறிந்து ''வாரும் பிள்ளாய் நீ ஏன் விருதாவிலே (வீணாக). ஜீவனுக்கு இம்சை பண்ணிக் கொள்ளுகிறாய். இந்த ஊருக்கு நாழிகை வழி கிழக்காக வன்னிவன க்ஷேத் திரமும், அங்கே ஒரு மகாலிங்கமும் இருக்கிறது. அவ ரண்டை போய் பிரார்த்திச்சாயானால் திருஷ்டிவரும். மோட்சமும் உண்டாம். அவருடைய மகிமையை நாமறி யோமே. ஒருதரம் போய்ப் பார்த்தால் அவர் கிருபை பண்ணுவார்'' என்பதாய்.

அவன் நல்லதென்று தரித்திரனாகக்குள்ள ஒருபடி தேன் மாத்திரம் கொண்டு வன்னிவன க்ஷேத்திரத்திலே வந்து பிரும்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி அந்த சுவா மிக்குக் கொண்டுபோன தேனை அபிஷேகத்துக்குக்

---

1 மலை.

2 மரங்கள்.

கொடுத்துத் தானும் நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணி ஸேவிக்கச்சே, சுவாமி தயாசாலியாய் அவனுக்குத் திருஷ்டி (கண்பார்வை) வரப்பண்ணி அவன் ரெண்டு மூன்று மாசம் அந்த ஸ்தலத்திலேதானே வாசம் பண்ணிக்கொண்டு, சுவாமியினுடைய சேவையும் பண்ணுவதாய்ச் சிவன் தம்முட பர்வதத்திலே வாசம் பண்ணினான் என்று அவனிட வம்சத் துடனே அவனுக்குத் தம்முடைய சாயுஜ்யபதவியை அடை விச்சான்.

இந்தப்படி ஆ(யா)க்கும் அந்த வன்னிவன க்ஷேத்திரத் தின் மகிமை என்று சூதர் நைமிசாரணியவாசிகளுக்கு இந்த விருத்தாந்தமெல்லாம் சொன்னார்.

இதனை அவர்கள் கேட்டு சந்துஷ்டாளாய் இப்படி யாரய்யா உம்மைப்போலே தயாசாலியாக இருக்கிறார்கள் என்று அவருக்கு (சூதமுனிவருக்கு) அநேக வெகுமானம் பண்ணித் நாங்களும் அவருடனே கூட இந்த வன்னிவன க்ஷேத்திரத்துக்கு வந்து பிரும்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி சுவாமியை(க்கு) சோடசோபசார பூஜையும் விதி வத்தாகப் பண்ணிவெச்சு சேவிச்சு சிவசாயுஜ்யமடைஞ் சாள்.

இந்தக் கதையைக் கேட்டபேர், படிச்சபேருக்குச் சகல-பாபமும் போய்ப் பரிசுத்தாளாய் சிவசாயுஜ்ய மடைந்து விடுவார்கள்.

சுபமஸ்து